Registered as a News Paper
பொழிவு: 28
குவிப்பு: 06
பக்கங்கள்:08
விலை: 50/-
ஆனி: 2023
(ISSN 1800-2641)

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா
THE TAMIL CATHOLIC MONTHLY BY THE DIOCESE OF MANNAR - Kalaiyaruvi, Social Communication Centre, Manna Paper Office, No.202, Talaimannar Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 076-3801841, Email : mannamnrc@gmail.com, Web-www.manna.lk, Fb - Mannar Catholic Media
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 104 / News / 2021"

"ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக 42வது ஆண்டுப்பயணம்"

## இறையாசீருடன் தனது 75வது அகவை நிறைவில் எமது மன்னார் மறைமாவட்ட நல்லாயன்



எமது மறைமாவட்ட ஆயர் தந்தை பேரருட்கலாநிதி பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் 20.05.2023 அன்று தனது 75வது பிறந்த தினத்தை நினைவுகூர்ந்து இறைவனுக்கு நன்றி பலி செலுத்தினார். எமது மன்னார் மறைமாவட்டம் குறித்து எவ்வித முன் அனுபவங்களும் இல்லாததொரு நிலையிலேயே 30.12.2017 அன்று எமது மறைமாவட்டத்தில் பொறுப்பேற்றார். பொறுப்பேற்ற நாள் முதல் இந்நாள் வரையிலும் எமது மறைமாவட்டத்தின் நல்வளர்ச்சிக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து பணியாற்றி வருகின்றார்.

02

## பதுவையின் புனிதராம் புனித அந்தோனியார் திருவிழா யூன் - 13



## மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் யுவதிகளால் நடாத்தப்பட்ட மாபெரும் செபமாலை பேரணி







மரியன்னையின் வணக்க மாதத்தை முன்னிட்டு மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் பணி ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் வவுனியா மறைக்கோட்ட இளைஞர் யுவதிகள் இணைந்து 14.05.2023 அன்று வவுனியா வேப்பங்குளம் பங்கிலிருந்து இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயம் நோக்கிய செபமாலை பேரணி இடம்பெற்றது. 28.05.2023 அன்று மன்னார் பேராலயம் தொடக்கம் பள்ளிமுனை நோக்கி மாபெரும் செபமாலை பேரணி இடம்பெற்றது. மன்னார் மறைமாவட்ட இளைஞர் யுவதிகளுடன் இணைந்து இளைஞர் ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி A.விக்டர் சோசை அடிகளார் அவர்கள் சிறப்பான முறையில் ஒழுங்கமைத்திருந்தார்.

"மன்னார் மறைமாவட்டம் வேதசாட்சிகளின் பூமி"

# மன்னா
## பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

**வல்லமையுள்ள யேசுவின் நாமத்தில் நல் வாழ்த்துகள் கூறி தொடர்வது,**

நாம் வாழும் இன்றைய எண்ணியல் உலகில் இறைவன் இருக்கிறாரா? இல்லையா? என இறை மக்களிடையே வினா எழும்படியாக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. நாட்டு மக்களை எல்லா வகையிலும் நெருக்கடி நிலைக்கு உள்ளாக்கி, மக்களின் வாழ்வாதாரம் பாதிப்புற்ற நிலையில் நாம் வாழ்கின்றோம். இயேசு கிறிஸ்து நிறுவிய அரசே நிலையான அரசு என்பதனை உணராத எம் நாட்டு அரசியல் தலைவர்களின் எதேர்ச்சிகார போக்கின் தன்மையானது, நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வருகின்றமை கண்கூடு. 2009.05.18 அன்று இரத்த ஆறு ஓடியது. அதை நினைத்து நினைவேந்தல் நிகழ்வு அனுஷ்டிக்கப்படுகின்றது. எம் நாட்டு அரசு. விவிலியத்திலே பழைய ஏற்பாட்டு பாஸ்கா-கடத்தல் விழாவுடன் எம் முள்ளிவாய்கால் நாளை ஒப்பிட்டு நினைவுறுவோம். விடுதலை பெறவேண்டும் என்ற வேட்கையே எம் நிலங்களில் இரத்த ஆறு ஓடுவதற்கு காரணமாக அமைந்தது.

ஒரு சாண் வயிற்றை நிரப்புவதற்கு வழி இன்றி உப்பில்லா கஞ்சியை குடித்தார்கள். தண்ணீரென்று இரத்தத்தை பருகினார்கள். இதை எல்லாம் கண்டு கொள்ளாத எம் அரசு ஆண்டு தோறும் வெற்றி விழா கொண்டாடி மகிழ்கின்றது. மண் மீதான அதன் வேட்கை தணிந்தது. ஆனாலும் இன்று மதவேட்கை, பௌத்த மயமாக்கல் ஆதிக்கம் எம் நாடெங்கிலும் அதிலும் எம் வடக்கு கிழக்கு பகுதிகளில் மேலோங்கி இருப்பதை எம்மால் காணக்கூடியதாக உள்ளது. இந்நிலை கண்டும் காணாமல் கண்மூடி ஒவ்வொரு அரசியல் தலைவர்களும் செயற்படுகின்றதால் இத்தகையதொரு சூழ்நிலையில் எமது கிறிஸ்தவ விசுவாசத்தை நாம் எவ்வாறு பாதுகாக்க வேண்டும், எம் நிலை வழுவாது விசுவாசத்தின் விளைநிலமாக எவ்வாறு வாழவேண்டும் என்பதை சற்று சிந்திப்போம். இறையாட்சி மீது உறுதியான நம்பிக்கை கொண்டதாக எமது விசுவாச வாழ்வு அமைவதாக. இயேசுகிறிஸ்துவில் ஒன்றிணைந்தவர்களாக அவரது ஒரே அரசின் கீழ் பயணிக்க ஒன்றிணைவோம்.

**என்றும் கிறிஸ்துவில்**
**அருட்பணி. ம. செல்வநாதன் பீரிஸ்**
**மன்னா பதிப்பாசிரியர்**

## மன்னார் மறைமாவட்ட திருவழிபாட்டு நாட்காட்டி
### ஆடி 2023

02. மடுமாதா திருவிழா - மடுத்திருப்பதி
03. புனித தோமையார் திருவிழா - கற்கிடந்தகுளம்
04. அருட்பணி. விக்ரர் குரூஸ் அ.ம.தி அடிகளாரின் நினைவு தினம் (2013)
06. செபமாலை அன்னை திருவிழா - பாலையடி புதுக்குளம்
08. குழந்தையேசு திருவிழா - இத்திக்கண்டல்
09. புனித தோமையார் திருவிழா - கல்நாட்டி (முருங்கன்)
10. புனித ஆரோக்கிய அன்னை திருவிழா - நானாட்டான் பங்குத் திருவிழா
11. மடுமாதா திருவிழா - மகாறம்பைக்குளம்
12. திருஇருதய ஆண்டவர் திருவிழா - இலந்தைவான்
13. நல்லாயன் திருவிழா - மெண்டிஸ்பண்ணை, பீடியாபாம் பெரியகட்டு
- செபஸ்தியார் திருவிழா - மருதமடு
14. குழந்தையேசு திருவிழா - குழந்தையேசுபுரம் (மன்னார்)
15. புனித மரியகொறற்றி திருவிழா - பெரிய பண்டிவிரிச்சான்
16. புனித கார்மேல் அன்னை திருவிழா - கார்மேல்நகர், (பொற்கேணி), ஆவணம், நாகார் இலுப்பைக்குளம், இளமருதங்குளம், அளவக்கை, பறப்பாங்கண்டல்.
- கார்மேல் சபை அருட்சகோதரிகள் விழா
19. அருட்பணி. செபஸ்ரியன் குரூஸ் அடிகளாரின் நினைவு தினம் (2016)
20. புனித செபஸ்தியார் ஆடிப்பொங்கல் - பேராலயம்
22. புனித அந்தோனியார் திருவிழா - முசல்குத்தி
23. புனித அன்னம்மா திருவிழா - இறம்பைவெட்டி மகாறம்பைக்கும்
- சுதெச குருக்கள் தினம்
25. புனித யாகப்பர் திருவிழா - கொக்குப்படையான், நறுவிலிக்குளம்,சிவபுரம், அடம்பன்தாழ்வு, விடத்தல்தீவு, பறப்பாங்கண்டல், முருங்கள்கமம், சிறுநீலாசணை, கட்டுக்காரன் குடியிருப்பு
26. புனிதஅன்னம்மா திருவிழா - வங்காலை, பூவரசன்குளம், பத்திமாநகர் (எழுத்தூர்), கொக்குப்படையான்
29. புனித அந்தோனியார் திருவிழா - பன்னவெட்டுவான்

### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்
வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

1ம் பக்கத் தொடர்ச்சி
**இறையாசீருடன் தனது 75வது...**

தனது பராமரிப்பின் கீழுள்ள குருக்கள் துறவிகளை மிகவும் கரிசனையுடனும் அன்புடனும் பராமரித்து வருகின்றார். தனது 75வது வயதை எட்டியுள்ள இந்நிலையில் எமது தந்தை அவர்களின் உடல் நலம் மென்னேலும் சிறக்கவும் தொடர்ந்தும் இவரது முதுமை நாட்களில் இறைவனின் உடனிருப்பு என்றும் கிடைக்கவும் மன்னார் மறைமாவட்ட இறைமக்கள் சமூகம், குருக்கள், துறவிகள் சார்பாக எமது ஆயர்தந்தை அவர்களை வாழ்த்தி நிற்கின்றோம்.

எமது மறைமாவட்ட திருஅவையை பொறுப்பேற்ற காலப் பகுதியிலிருந்து தற்போது வரை எமது மறைமாவட்டத்தின் முழு வளர்ச்சிக்காக செயற்பட்டார். இப்பணிகளுள் குறிப்பிடத்தக்க சிறப்பு பணிகள் வருமாறு

❖ ஆலய புனர் நிர்மானங்களும் புதிய ஆலய திறப்புக்களும் பங்குமனை கட்டி திறந்து வைத்தலும், ஆசீர்வதித்தலும்.
❖ எமது மறைமாவட்டத்திற்கு தனியார் மருத்துவமனை மடு மாதா வைத்தியசாலை ஸ்தாபிக்கப்பட்டள்ளமை. இதன் மூலம் சிறப்பானதொரு மருத்துவ நலன்புரி சேவையை மக்களுக்கு வழங்கியமை.
❖ கல்வி துறையில் மற்றுமோர் படிநிலையாக எமது மறைமாவட்டத்தில் புனித யோசவ்வாஸ் இறையியல் கல்லூரி எமது ஆயர் அவர்களின் முழுமையான வழிநடத்தலுடன் ஆயரின் சிந்தனையின் கீழே ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.
❖ மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி நிலையம் இடம் மாற்றப்பட்டு தனிவளாக ஸ்தாபிக்கப்பட்டமை.
❖ எமது விசுவாச வளர்ச்சிக்காக தம்மை அர்ப்பணித்த மன்னார் மறைசாட்சிகளின் நினைவு கல்லறையை சுற்றி சிற்றாலயம் அமைத்தமையும் அக்கல்லறையினை புனரமைத்தமையும்.
❖ ஓய்வு நிலை குருக்களுக்கான வதிவிடம் அமைத்து அவர்களை பராமரிக்க தேவையான அனைத்து வசதிகளும் கொண்ட ஓய்வுநிலையம் ஒன்றை நிறுவியமை.

எமது ஆயர் தந்தை அவர்களின் பணிவாழ்வு சிறக்கவும் அவரது 75வது ஆகவை நிறைவை முன்னிட்டும் செபத்துடன் கூடிய வாழ்த்துக்களை மன்னா பத்திரிகை சார்பாக தெரிவித்துக் கொள்கின்றோம்.●

# மன்னார் மறைமாவட்ட அன்பிய வாரம்



எமது மன்னார் மறைமாவட்டத்திலே அன்பிய வாரமானது 28.05.2023 – 04.06.2023 வரை அதிகமான பங்குகளில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. முதல் நாளிலே பங்குகளில் அன்பியக் கொடிகளை ஏற்றி திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டதுடன் அன்பிய வாரத்திலே வீடுகளில் திருவிலியம் அரங்கேற்றம் செய்யப்பட்டு அன்பிய வழிபாடுகள் நடாத்தப்பட்டதுடன் பல சிரமதானப் பணிகள், நோயாளர் சந்திப்புகள், தேவையில் இருப்போருக்கான உதவி செயற்பாடுகளில் ஈடுபட்டதுடன் ஒருசில பங்குகளில் அன்பியப் பகிர்வும், மாணவர்களுக்கான அன்பியப்பயிற்சியும், கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த அன்பிய வாரத்திலே அன்பிய மத்திய குழுவினர் பல பங்குகளையும் தரிசித்து, மாணவர்களுக்கான கருத்தமர்வு, அன்பியப் பயிற்சி ஊக்குவிப்பாளர்களுக்கான கருத்தமர்வு, சிறப்புத் திருப்பலி, அன்பியம் பற்றிய நாடகம், இறைமக்களுக்கான அன்பிய விழிப்புணர்வு உரைகள் என்பனவற்றை வழங்கினர். இந்நிகழ்வுகள் காத்தான்குளம், பேராலயம், அச்சங்குளம் (நானாட்டான்), விடத்தல்தீவு, கட்டைக்காடு, உயிலங்குளம், தலைமன்னார் ஆகிய பங்குகளில் இடம்பெற்றன.●

## வஞ்சியன்குளம் பங்கின் மாதிரிக்கிராம புனித அன்னை வேளாங்கண்ணி ஆலயத்திறப்பு விழா





கடந்த 21.05.2023 அன்று வஞ்சியன்குளப்பங்கின் மாதிரிக் கிராம புனித அன்னை வேளாங்கண்ணி ஆலய அபிஷேக விழா மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் பங்குத் தந்தை அருட்பணி அலெக்சாண்டர் சில்வா பெனோ அடிகளார், குருமுதல்வர் அருட்பணி கிறிஸ்துநாயகம் அடிகள் முருங்கன் மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி யூட்குரூஸ் அடிகள் வஞ்சியன்குளப்பங்கின் முன்னைநாள் பங்குத்தந்தையர்கள் ஏனைய அருட்பணியாளர்கள் எம் கிராமத்தின் அருட் பணியாளர்கள் அருட்சகோதரிகள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார்கள். மேலும் இந்நிகழ்வில் இவ்ஆலயம் இங்கு அமைவதற்கு உதவியாக இருந்த அமரர் அருட்பணி மேரி பஸ்ரியான் அடிகளாருக்கு இரண்டு நிமிட இறைவணக்கம் செய்யப்பட்டது. அத்தோடு 70வயதுக்கு மேற்பட்ட கிராமத்தின் பெரியோர்கள் 27பேர் கௌரவிக்கப்பட்டனர்●

## துறவற வாழ்வில் வெள்ளிவிழா காணும் அருட்சகோதரிகள்




துறவற வாழ்வில் வெள்ளிவிழா காணுகின்றனர் இயேசு மரியின் அன்பின் சகோதரிகள் சபையைச் சேர்ந்த அருட்சகோதரிகளான ஆன் றோகினி, பிறிசில்லா, டொறத்தி ஆகியோர். இவ்விரு அருட்சகோதரிகளுக்கும் எமது மன்னார் மறைமாவட்டம் சார்பாக செபங்களையும் வாழ்த்துக்களையும் கூறி நிற்கின்றோம்.●

## துயர் பகிர்கின்றோம்



கடந்த 05.06.2023 அன்று அன்புக்கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி மிஷல் லெம்பேட் அவர்கள் தனது 73வது வயதில் இறைபதமடைந்தார்.

அவரது ஆன்மா இறைவனில் இளைப்பாற நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.●

கலையருவி ஊடகத்தில் பணியாற்றும் J.டிறோன் அவர்களின் தந்தை திரு.செபமாலை ஜெகநாதன் கடந்த 17.05.2023 அன்று இறைபதமடைந்தார். அவரது ஆன்மா இறைவனில் இளைப்பாற பிரார்த்திப்பதோடு, அவரது குடும்பத்தினருக்கு மன்னா பத்திரிகை சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.●

## இம்மாத இறைவார்த்தை

❖ மானிடா! இறைவாக்காகச் சொல்: தலைவர் கூறுவது இதுவே ஒரு வாள்! கூர்மையாக்கப்பட்டதும் துலக்கப்பட்டது மான வாள்! படுகொலை செய்வதற்கென அது கூர்மையாக்கப் பட்டுள்ளது! மின்னலென ஒளிர்வதற்கென அது துலக்கப் பட்டுள்ளது! நாம் மகிழ்ச்சி கொள்வோமா? ஏனெனில், என் மக்கள் எல்லா எச்சரிக்கைகளையும் தண்டனைகளையும் புறக்கணித்து விட்டனர். (எசே 21:9-10)

❖ மானிடா! நீயோ இறைவாக்குரை கை கொட்டு இருமுறை, மும்முறை வாள் வீசப்படட்டும் கொலைக்கான வாள் அது அவர்களைச் சூழ்ந்து வரும் படுகொலைக்கான வாள் அது. (எசே 21:14)●

## 2023ம் ஆண்டிற்கான திருத்தந்தையின் செபக்கருத்துக்களில் வைகாசி மாதத்திற்கானது

**திருச்சபையிலுள்ள அமைப்புக்கள் குழுக்களுக்காக**

திருச்சபையிலுள்ள அமைப்புக்களும் குழுக்களும் தமது பணிநோக்கினை (Charism) உலகிலுள்ள தேவைகளுக்காக அர்ப்பணித்து, நாள்தோறும் தமது நற்செய்தி அறிவிப்பு பணியை கண்டு கொள்ள மன்றாடுவோம்.

## செய்திகள்

# ஏழிரண்டு ஆண்டுகள் வலிசுமந்த மண்ணில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள்




கடந்த 18.05.2009 அன்று நடைபெற்ற தமிழின மக்களின் படுகொலையை நினைத்து அனுஷ்டிக்கும் இரங்கல் நிகழ்வுகள் வடபகுதியின் பல இடங்களில் நடைபெற்றது.

குறிப்பாக எமது மன்னார் மாவட்டத்திலும் நகர பேருந்து நிலையமைப்பகுதியில் நடைபெற்றது குருக்களுடன் பொதுமக்களும் இணைந்து படுகொலை செய்யப்பட்ட எம் ஒவ்வொரு உறவு களையும் நினைத்து நினைத்து நினைவுதீபம் ஏற்றி அவர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காக மௌனமாக பிரார்த்தனை செய்ததோடு பறிபோன எம் தாய் நிலமும் சிந்தப்பட்ட எம் தாய் இரத்தத்திற்கு நீதிகேட்டும் சிறு உரை இடம்பெற்றது. இந்நாளின் முக்கிய நிகழ்வான முள்ளிவாய்க்கல் கஞ்சி அனைவருக்கும் பகிரப்பட்டது.

# பள்ளங்கோட்டை புனித அந்தோனியார் ஆலயம் அபிஷேக நிகழ்வு



மன்னார் மறைமாவட்டத்தில் நானாட்டான் பங்கின் பள்ளங்கோட்டை கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட புனித அந்தோனியார் ஆலயம் 20.05.2023 சனிக்கிழமை அன்று மாலை 5 மணியளவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களால் அபிஷேகம் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

மேலும் இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட குருமுதல்வர் அருட்பணியாளர்கள், அருட்சகோதர சகோதரிகள் பங்கு மக்கள் ஆலய சபை நிர்வாகத்தினரும் இவ்நிகழ்வில் கலந்துகொண்டார்கள். பங்குத்தந்தை அருட்பணி சுரேந்திரன் றெவல் சிறப்பாக அனைத்து நிகழ்வுகளையும் ஒழுங்குபடுத்தியிருந்தார். இதனைத் தொடர்ந்து அன்றைய நாளில் ஆயரின் 75 வது பிறந்த தினத்தை முன்னிட்டு கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடப்பட்டது.

# வாழ்வை வளமாக்கும் அன்பியம்

**"நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள், நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவற்றையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள்" (மத் 28:19-20)**

திருத்தந்தை 6ம் பவுலடிகளாரதும் அவரைத் தொடர்ந்து வந்த திருத்தந்தையரதும் அறிவுரைகளுக்கமைய சிறிய கிறிஸ்தவக் குழும முறையை 2ம்வத்திக்கான் சங்கத்தில் கட்டியெழுப்பவும் உண்மைத்தன்மையுள்ள ஒரு தலைசிறந்த வழிமுறையாகவும் இறைமக்களின் விசுவாச வளர்ச்சிக்கும் சிறந்த தலைமைத்துவங்-களை வளர்ப்பதற்கும் கிறிஸ்தவ விசுவாசத்தை பரப்புவதற்கும் அன்பியம் வழியமைத்துக் கொடுக்கின்றது.

அன்பியம் முழுமையாக மனித வாழ்வின் நிறைவை நனவாக்கும் கனவினைக் கொண்டுள்ளது. அன்பியம் என்பது ஒரு பக்திச் சபையல்ல மாறாக இது ஒரு குட்டித் திருச்சபையாகும். பத்து அல்லது பதினைந்து குடும்பங்கள் அனைவரும் ஓர் அன்புச் சமூகமாக ஒன்றிணைந்து வாழ்வதாகும். எல்லா வயதினரும், எல்லாத் தரப்பு மக்களும் இந்த அன்புச் சமூகத்தில் உறுப்பினர்கள், சமஉரிமை உடையவர்கள். சாதாரண மக்களின் குரல்கள் இங்கு கேட்கப்படுகின்றன. அதனால் திருச்சபை பங்கேற்புத் திருச்சபையாகத் திகழ்கின்றது. ஏனெனில் இதுவே ஆதிகாலக் கிறிஸ்தவர்கள் வாழ்ந்த வாழ்க்கைமுறை. அவர்கள் திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவ-திலும், இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள் (தி.ப 2:42-47)

திருச்சபையின் அடிப்படைப் பண்புகளாகிய விசுவாசம், அன்புறவு, அருளடையாளங்கள், வழிபாடு போன்றவைகள் அன்பியங்களில் கண்கூடாக உணரக்கூடிய அளவுக்கு வாழ்ந்து காட்டப்படுகின்றன. வார்த்தையை வாழ்வாக்கு, மறைபரப்பு பணியாற்ற, எல்லோரிலும் சிறப்பாக ஏழை எளியவர்களிடம் இறைவனைக் காண, நம்பிக்கை கொண்டு அநீதிகளை எதிர்க்க, மற்றவர்களின் துயர்களில் உடனிக்க, நம்பிக்கை வாழ்வில் வளர்ச்சிகண்டு ஈடுபாட்டுடன் உழைக்க என பல்வேறு வழிகளில் அன்பியம் அனைவருக்கும் உதவுகின்றது.

அன்பியங்கள் இன்றைய பங்குத்தளங்களில் முக்கிய தேவையாக உள்ளது. குடும்பங்களுக்கு இடையே நல்லுறவு வளரவும், கருத்துப் பரிமாற்றம் செய்யவும், குடும்பங்களுக்கிடையே நிலவும் மனக்கசப்புகளை களையவும், ஒருவர் மற்றவர்களின் தேவைகளில் உதவவும், பங்கின் பராமரிப்பு மற்றும் வழிபாடுகளை சிறப்பிக்கவும் அன்பியங்கள் போல் உதவக்கூடியது வேறொன்றும் இல்லை உண்மையான அன்பியம் அன்பிலே கட்டப்பட்டிருக்க வேண்டும். அகந்தை, கட்சி மனப்பான்மை, சாதிப்பாகுபாடு, தற்புகழ்ச்சி, விட்டுக் கொடுக்காமை, மக்கள் கருத்திற்கு மதிப்பளிக்காமை போன்றவை அன்பிய செயற்பாடுகளின் தடைக்கற்களாகும். இறைவன் இந்த உலகத்தை அன்பினால் கட்டியெழுப்பினார். அந்த அன்பினால்தான் இன்னமும் இந்த உலகம் உயிர்பெற்று இருக்கின்றது. சகமனிதர்கள் மீது அன்பு காட்ட முடியாத ஒருவனால் எப்படி அன்பே வடிவமான இறைவனை அடைய முடியும்?? ஆகவேதான் நமது கத்தோலிக்க திருஅவை 'அன்பியம்' என்பதை நிறுவி நம் அனைவரையும் ஒருவருக் கொருவர் அன்பு செய்ய கற்றுக் கொடுக்கின்றது. அன்பே உருவான இறைவனிடத்திலும் சக மனிதரிடத்திலும் உறவு கொள்ளவும், திருஅவையை கட்டிக்காக்கவும் அன்பியங்களில் தவறாமல் பங்கு கொள்வோம்.

'அன்பர் வழியில் வாழ்வோம்'

**S.லூர்துமேரி (சந்திரா)**
**அன்பிய மத்தியகுழு - நானாட்டான் பங்கு**

## பங்குத்தந்தையர்களுக்கு...

**தங்களது பங்குகளில் நடைபெறும் சிறப்பு வழிபாடுகள், திருவிழாக்கள் தொடர்பான விடயங்களை மன்னாவில் பிரசுரிக்கும் பொருட்டு எமது மன்னா மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

## சிறப்புப் பக்கம்

# மிசறியோ நிதியுதவியுடன் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் சூழல் பாதுகாப்புப் பிரிவினால் வைகாசி மாதத்தில் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் வருமாறு:

MISEREOR
IHR HILFSWERK

**மாணவர் சுகாதார மேம்பாட்டு விழிப்புணர்வும் கழிவு சேகரிப்பு வாளிகள் கையளிப்பும்**

மாணவ மாணவிகளின் தனிநபர் சுகாதாரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் மிசறியோ நிதியுதவியுடன் வாழ்வுதயம் சூழல் பாதுகாப்புப் பிரிவினால் இந்நிகழ்வு 16.05.2023 அன்று காலை 10.00 மணி தொடக்கம் 12.30 மணிவரை மன்/வட்டக்கண்டல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெற்றது. தரம் 10,11 மாணவிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்வினை பிராந்திய மேற்பார்வை பொதுத்தாதியர் உத்தியோகத்தர் திருமதி. பதுவத்தி அவர்களும், மாணவர்களுக்கான விழிப்புணர்வினை வைத்தியர் வெற்றிநாதன் அவர்களும் மேற்கொண்டனர். 35 மாணவிகளும், 32 மாணவர்களும் இதில் கலந்து பயனடைந்தார்கள்.



அத்தோடு, பாடசாலையின் சூழலைப் பாதுகாக்கும் நோக்குடன் கழிவு சேகரிப்பு வாளிகள் மூன்றும் பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

**அரச உத்தியோகத்தர்களுக்கான சூழல் பாதுகாப்புக் கருத்தமர்வு**

மேற்படிக் கருத்தமர்வானது 15.05.2023 அன்று மடு பிரதேச



செயலகத்தின் உத்தியோகத்தர்களுக்கும், 22.05.2023 அன்று மன்னார் பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்களுக்கும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மடு பிரதேச செயலாளர் திரு.பீட் நிஜாகரன் அவர்களும், மன்னார் பிரதேச செயலாளர் திரு. எம். பிரதீப் அவர்களும் தலைமை தாங்கினர்.

கறிற்றாஸ்-வாழ்வுதயத்தின் இயக்குனர் அருட்தந்தை செ.அன்ரன் அவர்கள் 'இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதால் ஏற்படும் பாதிப்புகள்' பற்றி உரையாற்றினார். மன்னார் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் திருமதி. அருள்மலர் அந்தோனிப்பிள்ளை மற்றும் திருமதி. ஜே.எம். அன்றறிடா ஆகியோர் 'உலக வெப்பமாதல், கழிவு முகாமைத்துவம், சூழல் பாதுகாப்புச் சட்டங்கள்' தொடர்பான கருத்துரையினை வழங்கினார். இறுதியில் பொதுக்கலந்துரையாடலுடன் இந்நிகழ்வு நிறைவுற்றது.

**மரம் நடுவோம் மழை பெறுவோம்**

சர்வதேச சூழல் பாதுகாப்பு தினத்தை (05.06.2023) முன்னிட்டு "மரம் நடுவோம் மழை பெறுவோம்" எனும் கருப்பொருளில் கறிராஸ் வாழ்வுதயம் நிறுவனத்தின் சூழல் பாதுகாப்பு பிரிவினால் 29.05.2023 அன்று காலை 9.30 மணி தொடக்கம் 11.30 மணிவரை பன்னவெட்டுவான் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கும், ஊழியர்களுக்கும் விழிப்புணர்வும் மரம் நடுகையும் இடம்பெற்றது,

இந்நிகழ்வானது வாழ்வுதய சூழல்பாதுகாப்புப் பிரிவின் இணைப்பாளர் திரு.யேசுதாசன் அவர்களின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்றது. தொழில்நுட்பக் கல்லூரியின் இணைப்பாளர் திரு. எஸ். திருப்பரன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுக்கொண்டார். வாழ்வுதய இயக்குனர் அருட்பணி அன்ரன் அடிகளார் மரம் நடுகை மற்றும் சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம் பற்றி உரையாற்றினார். மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மாவட்ட அதிகாரி திருமதி. ஜே.எம். மேரி அன்ரனிரா அவர்கள் "திண்மக்கழிவு முகாமைத்துவம், மரம் நடுகையின் பயன்பாடுகள்" முதலான தலைப்புகளில் விளக்கக்காட்சி ஊடாக விழிப்புணர்வினை வழங்கினார். 'மரம் நடுவோம் மழை பெறுவோம்' எனும் தலைப்பில்



வனவிரிவாக்கல் பிரிவின் அதிகாரி திரு. வினோத் டபரேரா அவர்கள் கருத்துரை வழங்கினார்.

விழிப்புணர்வு நிகழ்வின் பிற்பாடு மரங்கள் நடப்பட்டன. இந்நிகழ்வில் 25 மாணவர்களும் 10 ஊழியர்களும் கலந்து பயன்பெற்றுக்கொண்டனர்.

# செய்திகள்

## மன்னார் மாவட்ட அபிவிருத்தியில் “ பிரான்ஸ் அமைப்பின் மனித நேயப்பணி”

மன்னார் மாவட்டத்தில் கல்வியில் மிகவும் பின் தங்கிய நிலையில் காணப்படும் மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் பொருட்டு பல ஆண்டுகளாக பல்வேறுபட்ட கல்வி அபிவிருத்தி பணிகளையும், ஏனைய மனிதநேயப் பணிகளையும் பிரான்ஸ் மன்னார் மாவட்ட அபிவிருத்தி அமைப்பு நடைமுறைப் -படுத்தி வருகின்றது. கடந்த யுத்த காலங்களில் பல்கலைக்கழக கல்வியைத் தொடர்ந்த எம் மாவட்டத்தில் யுத்தத்தினால் நேரடியாக பாதிப்பிற்குள்ளான மாணவர் கல்விவளர்ச்சி தேவையின் பொருட்டு அப்போதைய எம் முன்னைநாள் ஆயர் அமரர் அதிவந்தனைக்குரிய பேரருட்கலாநிதி இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் அயராத முயற்சியினால் இவ்அமைப்பின் உதவியின் மூலம் 25 மாணவர்களுக்கு 03 வருடங்களுக்கு கல்வியைத் தொடர்வதற்கான உதவி வாழ்வுதயத்தின் மூலம் வழங்கப்பட்டது.

மேலும் எம் மாவட்டத்தைச் சேர்ந்த மிகவும் பின் தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த 34 ஆரம்பப் பாடசாலைகளைத் தேர்ந்தெடுத்து தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான மேலதிக வகுப்புக்களை நடாத்துவதற்கு உதவியுள்ளது. இதனால் பல மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்தியடைந்துள்ளார்கள். இப்பாடசாலைகள் சிலவற்றைச் சொல்வதாயின் மன்/கூராய் பாடசாலை, மன்/ ஈச்சளவக்கைப் பாடசாலை, மன்/பூமலர்ந்தான் பாடசாலை, மடு, முள்ளிக்குளம் பாடசாலைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றோடு தளபாட பற்றாக்குறையுடன் இயங்கிய மறிச்சுக்கட்டி மன்/முள்ளிக்குளம் பாடசாலைக்குத் தளபாடங் -களையும் கற்றல் உபகரணங்களையும் இவ்வமைப்பு வழங்கியுள்ளது.

அரசாங்கத்தினால் நடாத்தப்படுகின்ற பொதுப் பரீட்சைகளான 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை, க.பொ.த. உயர்தரப் பரீட்சை ஆகியவற்றில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு பாராட்டுச் சின்னங்களை வழங்கியதோடு கல்வி ஊக்குவிப்பு கொடுப்பனவாக பணப் பரிசில்களையும் வழங்கி உள்ளது. முன்பள்ளிக் கல்வி உதவியாக மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஆட்காட்டிவெளிக் கிராமத்தில் அருள்நிறை கன்னியர் சபையினரால் நடாத்தப்படும் முன்பள்ளிக் கல்வி தேவையின் பொருட்டு அதன் அபிவிருத்திக்காக பணவுதவி வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2019ம் ஆண்டு ஏற்பட்ட Covid-19 தாக்கத்தினால் தொழில் வாய்ப்புக்களை இழந்த நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கிராமங்களான மடுக்கரை, வாழ்க்கைபெற்றான்கண்டல், அளவக்கை, புத்திரர்கண்டான், ஆத்திக்குழி, செம்மண்தீவு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 300 வறிய குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டது. இதற்கான நிதி உதவி -யினையும் ஆதரவினையும் அமைப்பின் அப்போதைய தலைவர் S.இன்பம் மொறாய்ஸ் அவர்களும் நிர்வாக உறுப்பினர் -களும் வழங்கியிருந்தார்கள். இப்பொருட்களை பகிர்ந்தளிப்பதற்கு வேண்டிய சகல உதவிகளையும் நானாட்டான் பிரதேச செயலகம் வழங்கியிருந்தது. எம் மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்ற நோயாளர்களின் உடல் நலன் கருதி இவ்வமைப்பின் தற்போதைய தலைவர் திருமதி. ஜீவதி அந்தோனி மார்க் அவர்களினதும் நிர்வாக உறுப்பினர்களினதும் ஆதரவுடன் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான சிறுநீரக செயலிழப்பு மற்றும் புற்றுநோய் தடுப்பிற்கான மருந்துப் பொருட்கள் கடந்த 21.04.2023 அன்று மன்னார் பொது வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி நடராஜா நிஷாந்தினி மடு உதவிப் பரிபாலகர் அருட்பணி. அருண்தாஸ் அடிகளாரினால் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வைத்தியசாலை வைத்தியர்களும், மருந்தாளர்களும், அருட்பணி. யோணத்தான் அடிகளாரும், அமைப்பின் உதவியாளர் திரு. S. சுஜீவன் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

எம் மண்ணின் வளர்ச்சிக்காக மனிதநேயப் பணியை முன்னெடுக்கும் உதவிகரங்களை இறைவன் என்றென்றும் ஆசீர்வதிக்க பிரார்த்திக்கின்றோம்.●

## உலக இளையோர் நாளுக்கான திருத்தந்தையின் பயணத்திட்டம்

போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பனில் நடைபெற இருக்கும் 37ஆவது உலக இளையோர் நாளை முன்னிட்டு திருத்தந்தையின் பயணத்திட்டங்கள் குறித்த தகவல்கள் இன்று வெளியிடப்பட்டன. 06.06.2023 அன்று வெளியிடப்பட்ட அத்தகவல்களின்படி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஓகஸ்ட் மாதம் 02ம் திகதி முதல் 06ம் திகதி வரை லிஸ்பனில் நடைபெறும் 37வது உலக இளையோர் நாள் நிகழ்வுகளில் பங்கேற்க உள்ளார்.

ஓகஸ்ட் 02ம் திகதி தொடங்க உள்ள தனது லிஸ்பன் பயணத்தில் அரசுத்தலைவர்கள், அதிகாரிகள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவறத்தார், அருட்பணித்துவ மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோரையும் சந்திக்க உள்ளார்.

04.08.2023 வெள்ளிக்கிழமை காலை லிஸ்பனில் இயங்கும் இரக்கப்பணிகளுக்கான அமைப்பினரைச் சந்திக்க இருக்கும் அவர்கள், மாலையில் இளையோரோடு இணைந்து சிலுவைப்பாதையினை தியானிக்க உள்ளார். 05.08.2023 சனிக்கிழமை போர்த்துக்கலில் உள்ள பாத்திமா அன்னை ஆலயம் செல்ல இருக்கும் அவர்கள், 06.08.2013 ஞாயிற்றுக்கிழமை காலை இளையோர்க்கான திருப்பலியைச் சிறப்பித்து அன்று இரவே வத்திக்கான் திரும்புவார் என்பது குறிப்பிடத்தக்கது.●

## உலகில் அமைதி வாழ்வை ஊக்குவிப்பவர்களுக்கு விருது

2024ஆம் ஆண்டிற்கான Zayed மனித உடன்பிறந்த நிலை விருதிற்கு தகுதியானவர்களின் பெயர் பரிந்துரைகள் இம்மாதம், அதாவது ஜுன் மாதம் முதல் தேதி முதல் வரவேற்கப்படுகின்றன. உலகில் ஒருமைப்பாடு, ஒன்றிணைந்த வாழ்வு, நீதியானவாழ்வு, நல்நோக்கம், மக்களிடையே அமைதியை ஊக்குவித்தல் போன்றவைகளுக்கு சோர்வின்றி, சுயநலமின்றி உழைத்தவர்களுக்கு வழங்கப்படும் இந்த விருது 10 இலட்சம் டொலர் பரிசை உள்ளடக்கியது.

இவ்விருதுக்குத் தகுதியான தனிநபர்கள், மற்றும் அமைப்புக்களின் பெயர்களை பரிந்துரைக்க விரும்புபவர்கள், யூன் 01ம் திகதி முதல் ஒக்ரோபர் 01ம் திகதி வரை தங்கள் பரிந்துரைகளை அனுப்பலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் கௌரவ விருதைப் பெறுபவர்களாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும், இஸ்லாமிய தலைமைக்குரு அஹமட் அல்தாயிப் அவர்களும் ஆரம்பத்திலேயே அறிவிக்கப்பட்டுள்ள வேளை, ஐ.நா. பொதுச்செயலர் அந்தோனியோ குட்டாரெஸ், தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கையாளர் Latifa Ibn Ziaten, ஜோர்டான் மன்னர் மற்றும் அவரின் மனைவி, ஹெயிட்டியின் மனிதாபிமான அமைப்பு FOKAL, Sant'Egidio கத்தோலிக்க பிறரன்பு அமைப்பு, கென்ய அமைதி நடவடிக்கையாளர் Shamsa Abubakar Fadhil ஆகியோருக்கு இவ்விருது இதுவரை வழங்கப்பட்டுள்ளது.●

# இம்மாத புனிதர்கள்

## புனித லுவாங்கா சார்லஸ், பொதுநிலையினர்




‘‘வெள்ளைக்குருக்கள்’’ என்றழைக்கப்படும் துறவற சபையார் ஆபிரிக்காவில் நீல நதி மேற்குப்பகுதியில் வாழ்ந்து வந்து மக்களிடையே 1878ல் மறைபரப்புப் பணியில் இறங்கினர். இவர்கள் அனைவரும் 13 - 30 வயதுகுட்பட்ட இளைஞர்கள். இவர்களில் சிலர் இஸ்லாம் மதத்திலிருந்து புரொட்டெஸ்தாந்து சபைக்கு மாறி அதிலிருந்து கத்தோலிக்கரானவர்கள். கத்தோலிக்க மெய்மறை மிக விரைவாக பரவுகிறதென்பதை உணர்ந்த இஸ்லாமியரின் தூண்டுதலால் கி.பி 1886ல் முவாஸ்கா என்ற அரசன் கத்தோலிக்கர்களைத் துன்புறுத்த ஏவி விட்டான்.

சார்லஸ் லுவாங்காவும் அவரின் தோழர்களும் அரசவையில் பணிபுரிந்து வந்தனர். முவாஸ்கா ஓரினச் சேர்க்கைக்கு அடிமைப் பட்டவன். அவன் அரச அலுவல் புரிந்தவர்களைக் கெடுக்க சூழ்ச்சி செய்த போது சார்லஸ் தம் தோழர்களிடம் இது தீமை, கொடுமை என்று அறிவுரை சொல்லித் தடுத்துக் காப்பாற்றி வந்தார். சார்லஸ் தான் புதிதாக பெற்றுக்கொண்ட விசுவாசத்திற்காக நமுகொஸ்கோ என்ற இடத்தில் நெருப்பிலிடப்பட்டுக் கொல்லப்பட்டார். சார்லஸின் அறிவுரையின்படி மற்ற இளைஞர்கள் தங்கள் புனிதத்தில் நிலைத்து நின்றனர். 13 வயதான சிசுட்டு தனது கற்புக்காக உயிரைத் தியாகம் செய்தது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கு புனிதர் பட்டமளித்த திருத்தந்தை ஆறாம் பவுல் குறிப்பிடுகின்றார். ‘‘ஆபிரிக்காவில் இந்த மறைசாட்சிகளின் இரத்தம் சிந்தப்பட்டதன் பயனாக ஒரு புதுயுகம் தோன்றிவிட்டது என்று கூறினார்.●


## புனித எஃப்ரேம் ஆனி 09




புகழ்மிக்க ஆசிரியர், தேன்சொட்டும் மறையுரையாளர், கவிஞர், விசுவாசத்தின் பாதுகாவலர், மறைநூலின் ஆழமான விளக்க உரையாளர் என்று அவருடைய நாட்களிலே மக்கள் அவருக்குப் புகழாரம் சூட்டினர். திருச்சபையின் மறைவல்லுநர் என்று இவர் ஒருவருக்கு மட்டுமே பட்டம் சூட்டப்பட்டுள்ளது. திருவழிபாட்டில் திருப்பாக்களை சரளமாகப் புகுத்தும் பழக்கம் இருப்பதால் இவரை தூயஆவியின் புல்லாங்குழல் என்று அழைக்கின்றார்கள். தமது 18 வயதில் இவர் திருமுழுக்குப் பெற்றிருக்கிறார். அப்போது முதல் இவர் நிசிபிஸ் ஆயர் புனித ஜேக்கப்பின் கண்காணிப்பில் இருந்தார். ஆயரின் மறைவுக்குப்பின் நிசிபிசிலேயே தங்கினார். அங்கே பெர்சியர்கள் படையெடுத்து வந்த வேதகலாபனை நாட்களைத் தாம் தொகுத்த பாடல்களில் குறிப்பிடுகிறார். இவர் தனிமையை நாடியதால் ஒரு குகையில் நாட்களைச் செலவழித்து கடும் தவ முயற்சிகளை மேற்கொண்டார்.

திருவழிபாட்டில் மக்களின் மனதை இறைவன்பால் எழுப்பும் ஆற்றல் திருப்பாடல்களுக்கு நிறையவே உள்ளது என்பதை இவர் உணர்ந்தார். திருவழிபாட்டில் திருப்பாடல்களின் தந்தை என்ற பட்டம் இவருக்கு முற்றிலும் பொருத்தம். இவர் பெண்களின் பாடகர் குழாமுக்கு முக்கியத்துவம் கொடுத்ததோடு அன்னை மரியா எத்தகைய மாசுமறுவுமின்றி உற்பவித்தவர் என்பதை இவரது நூல்கள் விளக்குகின்றன.●


## புனித ரொமுவேல்ட்




இத்தாலியில் ரவென்னா நகரில் பிரபு குலத்தில் தோன்றிய இவர் 20 வயதுவரை மனம் போன போக்கில் வாழ்ந்தவர். ஒருமுறை இவரது தந்தை தம் உறவினர் ஒருவரை சொத்து தகராறு காரணமாக இவரின் கண்ணெதிரில் கொன்று போட்டார். இதனால் இவர் ஆசீர்வாதப்பர் சபை மடம் ஒன்றில் தஞ்சம் புகுந்து, அங்குக் கடும் தவ முயற்சிகளில் ஈடுபட்டார். ஆனால் அங்கு துறவிகள் எவ்வித கட்டுப்பாடுமின்றி வாழ்ந்தது இவருக்கு எரிச்சலை மூட்டியது. எனவே அந்த மடத்தை விட்டு வெளியேறினார். 30 ஆண்டுகள் சில துறவு மடங்களில் ஒழுங்குகளை பற்றுறுதியுடன் கடைபிடிக்க வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

தனிமையில் இறைவனுடன் நெருங்கிய தோழமைகொள்ள விரும்பியவர்களுக்கு, மனித வாடையே இல்லாத சூழலில் குடிசைகள் அமைத்துக்கொடுத்தார். அதில் ஒரு மடம் தான் கமல்டொலி என்ற இடத்தில் அப்பினைன் மலை உச்சியில் கி.பி 1012ஆம் ஆண்டு 5 குடிசைகள் கொண்டதாக அமைந்துள்ளது. இப்புனிதர் தனிப்பட்ட ஒரு துறவு சபையை தோற்றுவிக்க திட்டமிடவில்லை ஆயினும் கமல்டொலி நிறுவப்பட்ட மடம்தான் கடுமையான ஒழுங்குகள் கொண்ட பெனடிக்டின் துறவற சபையாக விளங்குகின்றது. இப்புனிதரின் வாழ்க்கை வரலாறு பற்றி விவரிக்கும் புனித பீற்றர் டேமியன் இவ்வாறு கூறுகின்றார். ‘‘ரொமுவேல்ட் உலகம் முழுவதையும் ஒரு துறவற மடமாகவும், ஒவ்வொருவரையும் ஒரு துறவியாகவும் மாற்றும் திட்டம் வைத்திருந்தார்.’’ மௌனமும் கடும் தவ முயற்சிகளும் இச்சபையின் சிறப்புக் கூறுகள்.●

## புனித ஜோன் ஃபிஷர் ஆனி 22



கி.பி 1469ம் ஆண்டில் தோன்றிய இவர் இங்கிலாந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் வேதக்கலை கற்றார். பின்பு குருப்பட்டம் பெற்று ரோஸ்டர் நகரின் ஆயராக நியமனம் பெற்றார். லூத்தரன் கொள்கையின் தவறுகளை கண்டித்து ஒரு நூல் எழுதினார். அரகோன் மாநிலத்து அரசியான கத்தரீனுக்கு பெரிதும் உதவியாக இருந்தார். இவரும் தாமஸ் மூரும் அரசனே மதத்திற்கும் தலைவன் என்று ஒப்புக்கொண்டு வாக்களிக்க மறுத்தனர். இதனால் தாமஸ்மூர் போன்றே இவரும் கொலை தண்டனைக்கு உரியவரானார். இவர் தலை வெட்டப்பட்டு உயிர் துறப்பதற்குச் சற்று நேரத்திற்கு முன்புதான் இதைப்பற்றி இவருக்கு அறிவிக்கப்பட்டது. இச்செய்தியை கேட்ட பின் தமது மறைநூலை தலைமாட்டில் வைத்துக்கொண்டு மேலும் 2 மணிநேரம் நிம்மதியாக தூங்கினார். அதே மறைநூலை எடுத்துக்கொண்டுதான் தூக்கு மேடைக்குச் சென்றார்.●

சிறப்புப் பக்கம்

# வாழ்வதும் சாவதும் நாவாலே

அ.ஜெயநாயகம், நோயல் டானியல்,
காத்தான்குளம், வட்டக்கண்டல், மன்னார

ஆண்டவரின் பெயர் மட்டுமே உயர்ந்தது அவருடைய பெயரை 'நா' என்றும் எப்போதும் போற்ற வேண்டும். 'நா' ஆண்டவரின் புகழை எக்காலமும் அறிவிக்க வேண்டும். வானதூதர் ரபேல் வாழ்நாள் முழுவதும் கடவுளை புகழ்ந்து பாட நம்மை அழைக்கின்றார். ஆண்டவரின் மாண்பின் மேன்மையையும் அவருடைய மாட்சியையும் வியத்தகு செயல்களையும் நா எடுத்துரைக்க வேண்டும்.

வாழ்க்கையில் இன்பம் காணவும் நல்ல நாட்களை காணவும் விரும்புவோர் தீச்சொல்லிலிருந்து தம் நாவைக் காத்துக் கொள்ள வேண்டும். வஞ்சக மொழியைத் தம் வாயை விட்டு விலக்கி பழிச்சொல்லுக்கு பழிச்சொல் கூறாமல் மாறாக ஆசி கூற வேண்டும். (1பேதுரு 3:9-10)

நாவினால் தவறு செய்யாதோர் பேறுபெற்றோர். அவர்கள் பாவங்களுக்கான மனஉறுத்தல் இல்லாதவர்கள், உளமார உண்மை பேசுபவர் தம் நாவினால் புறங்கூறாதவர் தாம் அடுத்தவரைப் பழித்துரையார் அனைவரும் ஆண்டவரின் கூடாரத்தில் தங்கிடத் தகுதியுள்ளவர்கள். நம் சொற்கள் இறைவனுக்கு ஏற்றவையாய் இருக்க மன்றாட வேண்டும்.

வாய் பிழை செய்யக்கூடாது என உறுதிகொள்ள வேண்டும். வீழ்ச்சியுறாதிருக்கவும் நாவே நம்மை அழிக்காதிருக்கவும், நம் வாயைக் காவல் செய்யவும் உதடுகளை நுண்ணறிவு எனும் முத்திரையிட்டு மூடவும் தந்தையாம் இறைவனை வேண்டுதல் செய்யவேண்டும். ஒருவர் உரைக்கும் உண்மை என்றும் நிலைக்கும் பொய்யுரையின் வாழ்வோ இமைப்பொழுதே. தீயோர் தம் பொய்யுரையில் தாமே சிக்கிக் கொள்வர். பொய்யுரைப்போர் வஞ்சம் நிறைந்தோர், பொய் பேசும் நா உண்மையை வெறுக்கும். இச்சகம் பேசும் வாய் அழிவை உண்டாக்கும். பொய்யரின் நடத்தை இகழ்ச்சிக்கு இட்டுச் செல்லும். அவர்களின் வெட்கக் கேடு அவர்களோடு எப்போதும் இருக்கும். பொய் பேசும் நா உண்மையை வெறுக்கும். இச்சகம் பேசும் வாய் அழிவை உண்டாக்கும். பொய்யரின் நடத்தை இகழ்ச்சிக்கு இட்டுச் செல்லும் அவர்களின் வெட்கக் கேடு அவர்களோடு எப்போதும் இருக்கும். பொய் சொல்லும் வாய் ஆன்மாவைக் கொல்லும்.

பொய்யுரைக்கும் நாவை ஆண்டவர் அருவருக்கிறார் உண்மையாய் நடக்கிறவர்களை அவர் அரவணைக்கிறார். இறுமாப்பு வரும் முன்னே இகழ்ச்சி வரும் பின்னே. தன்னடக்கம் இருக்குமாயின் ஞானமும் இருக்கும். நாவடக்கம் விவேகமுள்ளோரின் பண்பு. ஆணையிட வேண்டாம் என்று இறைமகன் இயேசு கட்டளையிடுகின்றார். ஆணையிட நம் நாவைப் பழக்கப்படுத்தக் கூடாது. இரட்டை நாக்கு (கபடம், நடிப்பு) உள்ளவர்களாக இருக்கலாகாது. மூன்றாவது நாக்கு (புறங்கூறல்) பலரை நிலைகுலையச் செய்கிறது. மூன்றாவது நாக்கினின்று பாதுகாக்கப்பட்டோர் பேறு பெற்றோர். ஒருவர் நாவினால் எதை விதைக்கிறாரோ அதையே உண்பார். தம் பேச்சின் விளைவை அவர் துய்த்தாக வேண்டும். தவறான போதனையினின்று நாவைக் காக்க வேண்டும். உண்மையின் வார்த்தையை நேர்மையாய் பகுத்து கூறும் பணியாளராக இருத்தல் வேண்டும்.

'நா' தீயைப் போன்றது. நெறிகெட்ட உலகின் உருவே அது. இந்த 'நா' நம் உடல் முழுவதையும் கறைப்படுத்துகின்றது. வாழ்க்கைச் சக்கரம் 'நா' கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு கொடியது. சாவை விளைவிக்கும் நஞ்சு நிறைந்தது. எனவேதான் வாழ்வதும் நாவாலே சாவதும் நாவாலே என நீதிமொழி 18:21 கூறுகின்றது என்பதை நாம் நினைவில் கொள்வோம்.

# நிலையற்ற வாழ்வில் மனிதம் எங்கே

நிலையற்ற வாழ்வில்
நீதியும் நியாயமும் நேர்மையுமாய்
நீவீர் வாழ்வீராக - என்றனர்!
வாழ்வியலாளர்கள் - ஆம்!
அப்படியே வாழ்ந்தேன்
உண்மை பேசினேன்
உதவாதவன் என்றார்கள்
நியாயம் சொன்னேன், நீ நீதிவானா - என்றனர்!
ஊருக்கு உண்மையை உணர்த்த
உருகி வழிகிறேன் செவிமடுக்க யாருமில்லை?
சிதறிப்போகிறது - என் சிந்தை!
ஊர் ஒருமைப்பட்டு நண்பர்கள், உறவு, வலுப்பெற்று
உலகிற்கு உதாரணமாக - என்கிறேன் !
நீ வாயை மூடிக்கொள் என்கின்றார்கள்.
அடுத்தவரை விமர்சிப்பதே - நீ
உன்னை விமர்சி, மனிதமாய்
மண்ணில் வாழ முயற்சி செய் - பிறரை
விமர்சிப்பவன் உன் வாழ்வில் - நீ
உன்னை இழந்து விடுவாய் என்பதை மனதில் கொள்!
மனம் அமைதி கொள்ள மதம் - என்கிறேன்
நேரத்தை செலவிட வேறு, விடயம்
இல்லையா என் று கேட்கின்றான் மதி கெட்டவன் !
ஒன்றை மட்டும், உனக்கு கூறுகிறேன்
இறைவனைப் பற்றிக்கொள் அப்போது
உனக்கு ஞானம் பிறக்கும் இதிலிருந்து விடுபட.......

**ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்**

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களைச் சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள். தரம்கண்டு மன்னாவில் பிரசுரிப்போம் - மன்னா நிர்வாகம் -

# ஒரு தாலந்து பெற்ற மனிதன்

பி.அந்தோனிப்பிள்ளை (அமிர்தம்)
புதுக்குடியிருப்பு, மோட்டைக்கடை

அன்றைய தின அதிகாலைப் பொழுது உதயமாகிவிட்டது. பகலவன் தனது ஒளி வெள்ளத்தை பூமியில் பரப்பிக் கொண்டிருக்கின்றது. வண்டுகள் ரீங்கார ஓசையிட, பறவைகள் கீச்சிட்டுக் கொண்டிருக்க, விலங்குகள் ஆனந்தமாக கூத்தாடிக் கொண்டிருக்கும் காலை வேளையில் காடுகளாலும் இயற்கை வளங்களாலும் அமையப்பெற்றிருந்த அக் கிராமத்தின் காட்டுப் பகுதிக்குள்ளிருந்து ஒரு பெரிய அலறல் சத்தம் கேட்டுக் கொண்டிருக்கிறது. சூரியன் ஒளிரும் அவ்வேளையில் இந்தச் சத்தம் அனைவரின் காதுகளுக்கும் கேட்கக் கூடியதாயிருந்தது.

“ஐயோ மோசம் போய்விட்டேன். எல்லாம் போய் விட்டதே” என்ற ஒரு ஆணின் அலறல் குரலொலி கேட்டுக் கொண்டிருக்கின்றது. சத்தம் வந்த திசையை நோக்கி மக்கள் சென்று கொண்டிருக்கின்றனர். அங்கே அவர்கள் கண்ட காட்சி அவ்வூரில் வாழ்ந்து வரும் செல்வந்தரான மனிதர் ஒரு பெரிய மரத்தருகே விழுந்து கிடந்து “என்னுடைய எல்லாச் செல்வமும் போய்விட்டதென” இரு கைகளாலும் தலையில் அடித்துக் கொண்டு உரத்த குரலில் அழுதுகொண்டிருந்தார். மக்கள் அவர் அருகில் சென்ற போதும் அவரது அழுகையும் ஒப்பாரியும் குறைந்தபாடில்லை. மேலும் மேலும் அழுது கொண்டே விம்மலுடன் நடந்தவற்றைக் கூறிக் கொண்டிருந்தார்.

அந்தக் கிராமத்தில் வாழ்ந்து வந்த அம் மனிதர் வசதி வாய்ப்புக்கள் அதிகம் கொண்டவராகவும் நிலபுலன்கள் கால்நடைகள் மற்றும் அதிகமான சொத்துக்கள் இருந்ததுடன் தொழில்துறைகளில் நல்ல முயற்சி உள்ளவராக காணப்பட்டதால் அதிக வருமானம் இருந்து வந்தது. கிடைக்கப்பெறும் பணத்தில் சிறிய தொகையை வீட்டுச் செலவுக்கென மனைவியிடம் கொடுத்துவிட்டு அதில் சிக்கனமாக வாழும் படி பணித்திருந்தார். அதனைக் கொண்டு அவரது மனைவியும் மூன்று பிள்ளைகளும் மிகவும் எளிமையான வாழ்வு வாழ்ந்து வந்தனர். இதன் காரணமாக அவருக்கும் குடும்பத்தினருக்கும் சுமுகமான உறவு இருந்ததில்லை. தனது தொழில் முயற்சிகளுக்கு முன்னுரிமையளித்து வந்ததால் குடும்பத்தைப் பற்றி அவருக்கு அக்கறையில்லை. அத்தோடு ஊர்மக்களோடும் நட்பான சுமுகமான உறவு இருக்கவில்லை அவரிடம் பணம் உதவி கேட்டுச் செல்லும் எவருக்கும் பொதுத் தேவைகளிற்கு நிதியுதவி கேட்கும் போதும் கொடுத்துதவும் மனப்பாங்கு அவரிடம் என்றுமே இருந்ததில்லை. “ எச்சிக் கையால் காகம் கலைக்கும்” பழக்கம் கூட அவரிடமில்லை. தன்னிடம் சேர்ந்திருக்கும் பணத்தை பற்றிய கவலையோடு வாழ்க்கை போய்க் கொண்டிருந்தது.

தற்போது அவருக்கு மேலதிகமாக ஒரு எண்ணம் ஏற்பட்டு மனத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது. தன்னிடம்



இருக்கும் பணத்தை தன் மனைவி மக்கள் தனக்குத் தெரியாமல் அபகரித்து விடுவார்களோ? என்ற பயம் தான் அது. அவ்வெண்ணம் அவரது மனத்தில் வேரூன்றி மரமாகிவிட்டதால் அது பற்றி யோசித்தும் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. பணத்தை வீட்டில் வைத்திருப்பதற்கு பயம். எவருக்கும் கடனாக கொடுத்தால், வங்கியில் வைப்புச் செய்தால் தன்னிடம் அதிக பணம் இருப்பது தெரியவரும் என்பதால் உதவி கேட்பவர்களும், கடன் கேட்பவர்களும், பொதுத் தேவைகளிற்கு நிதியுதவி கேட்பவர்களும் தன்னை இருக்கவே விடமாட்டார்கள் என எண்ணியவராய் தற்போது ஒரு முடிவுக்கு வந்து விட்டார். இனிமேல் பணத்தை கையில் வைத்திருக்க கூடாது. ஏதாவது முடிவு செய்ய வேண்டும்.

அப்போது அவரின் மனதில் இந்த எண்ணம் தான் முதலில் வந்தது. ஊருக்கு அருகில் இருக்கும் காட்டில் யாருக்கும் தெரியாமல் ஒரு மரத்தடியில் பள்ளம் தோண்டி பணத்தைப் புதைத்து வைத்தால் பாதுகாப்பாக இருக்கும் என்றும் பணத்தேவை ஏற்படும் போது திரும்பவும் தோண்டி எடுக்கலாம். அதன்படி இரவோடிரவாக தன்னிடம் இருந்த பணம் அனைத்தையும் மரத்தடியில் பள்ளம் தோண்டி பாதுகாப்பாக புதைத்து வைத்து விட்டு வந்துவிட்டார். தினமும் அதிகாலையில் அவ்விடத்திற்குச் சென்று நோட்டமிட்டு வருவது அவரின் தினசரி நடவடிக்கையாக அமைந்திருந்தது.

இதற்குப் பின்பும் சேரும் பணங்களையும் அதே இடத்தில் புதைத்து விட்டு விடியற்காலை வேளையின் சென்று பார்த்து வருவது தொடர்ச்சியாக இருந்து வந்தது. அவரின் இச் செயற்பாட்டை அவ்வூரில் வசித்து வந்த திருட்டுக் குணம் கொண்டவர்களால் அவதானிக்கப்பட்டு கண்காணித்து வந்துள்ளமை இந்த மனிதரால் அறிய முடியவில்லை. அதன் முடிவு அவரால் மரத்தின் அடியில் புதைத்து வைக்கப்பட்ட பணம் முழுவதும் திருட்டுப் போய்விட்டது.

இன்று அதிகாலை அவரும் வழமை போன்று பணத்தை பார்க்கச் சென்ற வேளையில் தான் பணம் கொள்ளை போய்விட்டதை அறிய முடிந்தது. அவ்வேளையில் அவரது அலறல் சத்தமும் அழுகையும் ஊரைக் கூட்டியிருந்தது. அவரைச் சுத்தி நின்றவர்களால் எவ்விதமான ஆறுதல் வார்த்தைகளையோ தேறுதலையோ கூற முடியவில்லை. அப்படிக் கூறிய போதும் தாங்க முடியாமல் கையால் தலையில் அடித்துக் கொண்டு விம்மி விம்மி அழுவதைத் தவிர அவரால் வேறொன்றும் செய்யத் தோன்றவில்லை. பிறருக்கு உதவ மனமில்லாமல் செய்த அற்பமான காரியம் இவ்வளவு துன்பத்தில் போய் முடியும் என்று எண்ணிப் பார்க்க முடியவில்லை. அதனை இப்போது உணர முடிந்துள்ளது. “நான் பிழை செய்து விட்டேன்” என்று திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டே அழுதுகொண்டிருந்தார்.

அவ்வேளையில் அங்கு குழுமியிருந்த மக்களில் வயது முதிர்ந்த பெரியவர் ஒருவர் எழுந்து தம்பி நடந்தது நடந்து விட்டது இனி அதைப்பற்றி என்ன ஆறுதல் சொன்னாலும் திரும்பக் கிடைக்கப்போவதில்லை. ஆண்டாண்டுகள் அழுது புலம்பினாலும் மாண்டவர் திரும்பி வரப் போவதில்லை. இதுவும் அதே போல் தான் நடந்ததை மறந்து விடு களவு போனது பற்றி காவல் துறையிடம் முறைப்பாடு செய்யலாம். ஆனால் இது சம்மந்தமாக அவர்களால் கேட்கப்படும் கேள்விகளுக்கு உன்னால் பதில் சொல்ல முடியாது. எனவே உன் பணம் களவு போகவில்லை என எண்ணிக் கொண்டு தினமும் இந்த இடத்திற்கு வந்து செல் மனதில் அமைதியை தேடிக் கொள் என்றார்.

மேலும், இந்தப் பணத்தை நீ எதற்குமே பயன்படுத்தவில்லை. இனிமேலும் பயன்படுத்தப் போவதில்லை. இந்தப் பணத்தைக் கொண்டு செய்வதற்கு எந்த தேவைகளும் இருக்கவில்லை. எனவே வீணாகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்காமல் வழமை போல் ஒவ்வொரு நாளும் அதிகாலையில் இந்த மரத்தடிக்கு வந்து சென்று கொண்டிரு. இதுதான் உன் மனதிற்கு ஆறுதல் கிடைக்கும் என்று பெரியதொரு அறிவுரையை வழங்கினார். அவ்வேளையில் அம் மனிதரும் இவரின் அறிவுரைதான் சரியானதென எண்ணிக் கொண்டு “நான் என்னிடமிருந்த செல்வங்களைக் கொண்டு எந்தப் பயனும் அடையவில்லை. இதனைக் கொண்டு எனது குடும்பத்தினர் உட்பட பிறரும் எவ்வித பயனும் பெறவில்லை. இப்படியான வாழ்க்கை வாழ்ந்து வந்த எனக்கு இந்தத் தண்டனை தேவைதான் என நினைத்த வேளையில் இறைமகன் இயேசுவால் மக்களுக்கு வழங்கிய தாலந்துகளின் உவமை அவரது மனக்கண்முன் வந்தது.

ஐந்து தாலந்துகள் பெற்றவன் அதனைக் கொண்டு மேலும் ஐந்து தாலந்துகள் பெற்றான், அவ்வாறே மூன்று தாலந்துகள் பெற்றவனும் மேலும் மூன்று தாலந்துகளைப் பெற்றான். ஒரு தாலந்து பெற்றவன் அதனை நிலத்தில் புதைத்து வைத்து தானும் பயனடையாமல் பிறரும் பயனடையாமல் வாழ்ந்து வந்த மனிதனை நினைவில் கொண்டு “அந்த மனிதன் நான்தான் என எண்ணியவராய்” ஊராரிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு உறுதி பெற்றவராக வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தார். இப்போது அவர் மனதில் புதுவாழ்வு ஏற்பட்டு விட்டது. இனிமேல் புதிய மனிதனாக வாழ்வார். உள்ளவனுக்கு கொடுக்கப்படும் பிறருக்கு உதவும் மனம் இல்லாதவனிடமிருந்து இருப்பதும் எடுக்கப்படும். இது வேதவாக்கு.

## சிறப்புப் பக்கம்

# வண.பிதா செ. அன்புராசா அடிகளாரின் “அன்புள்ள ஆரியசிங்க” வாசிப்பு அனுபவம் – ரஞ்சனி சுப்ரமணியம்



வரலாற்றுப் புகழ் வாய்ந்த எத்தனையோ கடிதங்கள் உலகில் பொக்கிஷங்களாகப் பாதுகாக்கப் படுகின்றன. இலங்கையின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆட்சி மாற்றமொன்றை ஏற்படுத்திய காலிமுகத் திடல் “அறகலய“ எனப்படும் அறப்போராட்டம் நடைபெற்ற தீர்க்கமான காலகட்டம் ஒன்றில், வணக்கத்துக்குரிய அருட்தந்தை செபமாலை அன்புராசா அடிகளாரால் எழுதப்பட்ட முப்பது கடிதங்களும் இவ்வாறே முக்கியத்துவம் பெறவேண்டியவை. 2022 ம் ஆண்டு ஏப்ரல் 14 ம் திகதி தொடக்கம் 2022 .07. 16ம் திகதிவரை அவரது முகநூலில் “அன்புள்ள ஆரியசிங்க...” எனும் தலைப்புடன் தமிழில் எழுதப்பட்ட இக் கடிதங்கள் இன்று சிங்கள மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்புகளுடன் நூலுருவாகி உள்ளமை மகிழ்ச்சிக்குரியது.

இலங்கை இனப்பிரச்சனையின் தோற்றம், வளர்ச்சி, இறுதி யுத்தத்தின் பின்னும் இன்றுவரை தொடரும் சிறுபான்மையினர் மீதான அடக்குமுறைகள் வரலாற்று ஆதாரத்துடன் இங்கு கூறப்பட்டுள்ளன. பெரும்பான்மை இன மக்களை நோக்கிய சில நியாயமான கேள்விகளும் முன்வைக்கப் பட்டு உள்ளன.யாரையும் புண்படுத்தாத ஆனால் கண்ணியமும் வலிமையும் துணிவும் மிக்க வார்த்தைப் பிரயோகங்களுடன் இந்நூல் அமைந்திருப்பது சிறப்பு. தங்குதடையற்ற மொழிஆளுமை அவரது எழுத்துக்கு அணி சேர்க்கிறது.

2022இன் நாடுதழுவிய பொருளாதார வீழ்ச்சியை மையப் படுத்திய பெரும்பான்மை இன மக்கள் எழுச்சியுடன், தமிழ்மக்கள் கடந்தகாலங்களில் அனுபவித்த ஒடுக்குமுறை -களை வெளிப்படுத்தி, ஒப்பு நோக்கும் விதமாக இந்நூல் அமைந்திருப்பதன் மூலம், பெரும்பான்மை மக்களிடம் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நன்நோக்கும் தெளிவாகிறது . அதே சமயம் தெற்கில் வாழும் மக்களின் துயரில் பங்குகொள்ளும் அன்பும் அரவணைப்பும் தெளிவாகவே இந்நூலில் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

சிறந்த இலக்கிய படைப்பாளியும் இறைபணியாளரும் ஆகிய அருட்தந்தை அவர்கள், நன்மனம் படைத்த சமூக செயற்பாட்டாளராகவும் தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர். தமிழ் மக்களின் இடர்களை அறிந்தவராக மட்டுமல்லாது அனுபவ சாட்சியாகவும் களத்தில் வாழ்ந்தவர். இருபத்தைந்து வருடகால குருத்துவப் பணியை ஆற்றிய இவர் யாழ்ப்பாணத் -திலும், வன்னி பிரதேசத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா போன்ற இடங்களிலும் மற்றும் பிரான்சிலும் நான்கு வருடங்கள் பணியாற்றியவர். வைத்திய சாலைகளில் ஆன்ம குருவாகவும் மறையுரைஞராகவும், குருமடம் ஒன்றின் உருவாக்குனராகவும், மாங்குளத்தில் அமைந்திருக்கும் செயற்கையாக அவையவங்களைப் பொருத்தும் 'அமைதிக் கரங்கள்' நிலையத்தின் இயக்குநராகவும், முல்லைத்தீவின் ஒட்டுசுட்டானில் மலரும் முல்லை கல்விவள நிலையத்திலும் அறப்பணி ஆற்றியுள்ளார். தற்போது கிளிநொச்சியில் அன்னை இல்லத்தின் கல்விவள நிலையத்தில் பணியாற்றுகிறார்.

“அன்புள்ள ஆரியசிங்க...“ என்னும் பிரதி, கடித வடிவிலான ஒரு வரலாற்றுக் கையேடு என்றும் கூறலாம். இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்தே கால்கோள் கொண்ட, தமிழ்மக்களின் துயர் சார்ந்த உரிமைப் போராட்டத்தை, அஹிம்சையில் ஆரம்பித்து ஆயுதம் தாங்கிய அதன் வடிவ மாற்றங்களை, அதற்கான நியாயங்களை, அரசின் அடக்குமுறைகளை, மூடி மறைப்புகளை பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு அறியத்தரும் நோக்கமே இப்படைப்பில் முன்னிலை கொள்கிறது. அதற்கு பொருத்தமான ஒரு சந்தர்ப்பமாக 2022 “அறகலய“ அமைந்திருந்தது.

யுத்த பூமியில் வாழ்ந்த மக்கள் அனுபவித்த இடர்கள் பற்றி பெரும்பான்மை மக்கள் மட்டுமல்ல, தென்னிலங்கையில் வாழும் சிறுபான்மை இனங்களும் சரிவர அறியாத பல விடயங்களை இக்கடிதங்களில் அவர் வெளிப்படுத்தி உள்ளார். ஒப்பீட்டளவில் தமிழ்மக்களின் பங்களிப்பு இந்த அறவழிப் போராட்டத்துக்கு குறைவாகவே இருந்ததன் காரணத்தைக்கூட சிங்கள மக்களில் பெரும்பான்மையானோர் புரிந்து கொள்ளாமல்தான் இருக்கின்றனர். சிறுபான்மை -யினரின் அபிலாஷைகளைப் புறந்தள்ளி, பெரும்பான்மையின மக்களே மனமுவந்து உருவாக்கிய அரசு இது. எதிர்ப்பைக் காட்டவேண்டிய முக்கிய பங்கும் அவர்களுக்கே என்பது பாதிக்கப்பட்ட சிறுபான்மையின் நியாயம்.

இக்கடிதங்களின் பெறுநர் ஆன ஆரியசிங்க என்பவர் யார் ? அவர் புகழ்பூத்த சிங்கள இனத்தின் பொது அடையாளமாக உருவகப்படுத்தப்பட்ட ஒரு கற்பனா கதாபாத்திரம். குறியீடு. ஆரிய வம்சத்தின் வாரிசாகவும் சிங்கத்தின் மைந்தர்களாகவும், தம்மை பெருமையுடன் நினைத்திருக்கும் எமது பெரும்பான்மை சகோதர இனத்தின் நன்மனம் கொண்ட ஒரு நண்பர். கடிதம் எழுதப்பட்ட அக்கால கட்டத்தில் சரித்திரப் பிரசித்தி வாய்ந்த “அறகலய“ எனும் அறக் கலகத்தில் பங்குகொண்டு அவர் காலிமுகத் திடலில் நின்றிருந்தார். அவரை அங்கு நிற்க வைத்ததற்கு காரணமானவர் யாரென அவர் தன் சுட்டுவிரலை நீட்டினால், நான்கு விரல்கள் அவர் பக்கமே காட்டி நிற்பதை உணர்வார். ஆம். அது எவ்வாறு என்பதைத் தான் தமது வாழ்வியல் அனுபவங்கள் கொண்டும் வரலாற்றுச் சம்பவங்களின் துணை கொண்டும் இந்நூலின் படைப்பாளர் விளக்க முயல்கின்றார். 2022ம் ஆண்டு இலங்கையின் சகல பிரதேசங்களிலும், அடிப்படைத் தேவைக்கான பொருட்களுக்காக மக்கள் வீதிகளில் தவம் கிடந்ததை யாரும் மறந்திருக்க முடியாது. அதற்கு முந்திய சில தசாப்த காலங்களை நோக்கினால்....

பெரும்பான்மை இனமக்களில் அதிகமானோர் “ஒரு சமூகமாக“ ஒன்று சேர்ந்து தமது அபரிவிதமான வாக்குகளால் அன்புக்குரிய அரசியல் வாதிகளை குடும்பமாக ஆட்சியில் அமர்த்தி அழகு பார்த்தார்கள். இறுதி யுத்தத்தின் வெற்றி நாயகர்களான அவர்கள் சிறுபான்மை மக்களுக்கு அதுவரை செய்த உரிமை மறுப்புகளை கணக்கில் கொள்ளாது வெற்றிக்களிப்பில் மெய் மறந்தார்கள். அவர்களின் அட்டூழியங்களை அரசியல் சாணக்கியம் என்றார்கள். ஊழல்களை “எங்கும் நிறைந்தது“ என சாதாரணமாகப் புறந் தள்ளினார்கள். தமிழ் பிரதேசங்களில் பொதுமக்களின் அழிவுகளை பயங்கரவாத ஒழிப்பு என்ற மாயைக்குள் தள்ளி ரசித்து மகிழ்ந்தார்கள். இறுதியுத்தத்தில் பொதுமக்களின் அழிவுகளையேனும் மனங்கொள்ளாது வீதியெங்கும் பட்டாசு கொளுத்தி பால்சோறு உண்டு களித்தார்கள்.

பல தசாப்தங்களாக தமிழ்மக்களின் அஹிம்சை வழிப் போராட்டங்கள் அரசினால் புறந்தள்ளப்பட்டதை எதிர்க் -காமல், ஆதரித்தார்கள். அதுவே ஆயுதக் கலாசாரத்துக்குள் தமிழ் இளைஞர்களைத் தள்ளி விட்டது என்பதையும் சிந்திக்க மறந்தார்கள். ஆனால் அவர்கள் போற்றிய அந்த ஆட்சியாளர்களோ தமது கடமைகளை மறந்தார்கள். இந்நாட்டை சீரழித்து இன்று வறுமை கொண்ட நாடாக உலகெங்கினும் கையேந்த வைத்தார்கள். அதமகுணங்கள் கொண்ட அரசியலானது இயற்கை வளம் மிகுந்த ஒரு நாட்டினை எத்துணை கீழ்நிலைக்குக் கொண்டு செல்ல முடியும் என்பதற்கு இலங்கை இன்று உதாரண தேசமாகி நிற்பது காலத்தின் கொடுமை.

பெரும்பான்மை இன மக்களான தமக்கென இன்னல்கள் தோன்றும்வரை, தாம் தேர்ந்தெடுத்த அரசியல் வாதிகள் கடந்தகாலங்களில் என்ன செய்தார்கள் என்பதைத் தட்டிக் கேட்க மறந்தார்கள். அல்லது நண்பர் “ஆரியசிங்க“ போலவே அறியாது இருந்தார்கள். இன ஒற்றுமை தங்கள் இருப்பினைக் கேள்விக்கு உரித்தாக்கும் என அரசியல்வாதிகள் மறைத்தார்கள் என்பதைக் காரணமாக ஏற்றுக் கொள்ள முடியாது. விரும்பினால் அறிய முடிகின்ற தகவல் தொழில்நுட்ப யுகத்தில் தான் நாம் வாழ்கிறோம்.

இனநல்லுறவு புரிந்துணர்வு மனிதாபிமானம் என்ற தார்மீக சிந்தனைகளை வளர்த்தெடுக்காத அரச் அதிகார ஆசையும் ஊழலும் மிகுந்த தீர்க்க சிந்தனையற்ற அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் பொருளாதார முன்னேற்றத்தை மேம்படுத்தாத அரசியல் சுரண்டல்கள் தமது பதவியை நீடிப்பதற்காக இனங்களிடையே ஊக்கி வளர்க்கப்பட்ட வன்ம உணர்வுகள் என்பன ஒரு புறமாக தொடர்ந்து கொண்டிருந்த அதேசமயம், சுதந்திரத்தின் பின் முப்பது வருடகால அகிம்சைப் போராட்டங்கள் தோற்றதால், இழந்துவிட்ட தமது உரிமைகளுக்காகவும் உறவுகளுக்காகவும், ஆயுதப் போராட்டத்துக்கு முன்வந்த தமிழ் இளைஞர்கள் பயங்கர வாதிகளாக வெளியுலகிற்கு இனம்காட்டப் பட்டார்கள். பயங்கரவாத ஒழிப்பு எனும் பெயரில் மூன்று தசாப்தங்கள் ஆயுதயுத்தத்தாலும், பொருளாதார மற்றும் போக்குவரத்துத் தடைகளாலும் தமிழ்மக்கள் ஒடுக்கப்பட்டார்கள். இவற்றை எல்லாம் பகுத்தறிந்து கொள்வதற்கு பெரும்பான்மை இன மக்கள் ஏன் மறந்தார்கள் என்ற தர்க்கபூர்வமான கேள்வியை ஆரியசிங்க மூலமாக அம்மக்களிடம் முன்வைத்த அன்புராசா அடிகளார், அரசியலின் அடிப்படையில் எங்கோ பெரும்பிழை இருப்பதை சுட்டிக்காட்டுகிறார்.

1948இல் சுதந்திரம் பெற்ற இலங்கை 1956இல் தனிச்சிங்கள சட்டம் கொண்டு வந்ததன் மூலம் இரு மொழிபேசும் மக்களை துருவமயமாக்கிய செயற்பாடு முக்கியமான ஆரம்பப் புள்ளி என தீர்க்கமாக வலியுறுத்திய அன்புராசா அடிகளார் வரலாற்றின் துன்பியல் நிகழ்வுகளையும் பட்டியல் இடுகிறார். சுதந்திரம் பெற்றபின் கைச்சாத்தான ஏழிற்கும் அதிகமான முக்கிய ஒப்பந்தங்கள், பேச்சுவார்த்தைகளின் தோல்வி(P-46), பத்திற்கும் அதிகமான பாரிய இடம்பெயர்வுகள் (P-57), இருபதுக்கும் அதிகமான இனக்கலவரங்கள்,அழிவுகள் (P-68), தமிழர்களின் அறிவாலயமாகவும் முதசொம் ஆகவும் திகழ்ந்த யாழ்நூலக எரிப்பு 1981 ( P-74), பயணப்பாதை இடர்கள்( P-87, 108), 1987/88களில் பாதுகாப்பு நடவடிக்கை எனும் பெயரில் இந்திய இராணுவத்தினரால் நடாத்தப்பெற்ற அட்டூழியங்களும் உடல் பரிதோதனைகளின் அவமானங்களும் (P-98), 2009 இறுதிப் போரின் உக்கிரம் (P-126-134), இத்தகைய அவல அனுபவங்களால் தமிழ் மக்கள் பெற்ற நன்மை என்னவாக இருந்தது. அதையும் பின்வருமாறு கூறுகிறார் அடிகளார். “தென்பகுதியில் இன்று (2022) மக்கள் வாழும் இக்கட்டான சூழ்நிலைகளில், அன்றே தமிழ் மக்கள் வாழப் பழகி இருந்தார்கள். அதற்காக உங்களுக்கு நாங்கள் நன்றி கூற வேண்டும். (P-15) சிங்கள மக்கள் எதிர்கொள்ளும் அத்தனை பிரச்சனைகளையும், இதைவிட மோசமான பொருளாதாரத் தடைகளையும் போக்கு வரத்துக் கஷ்டங்களையும் யுத்த வன்முறைகளையும் 1987ம் ஆண்டு தொடக்கம் 2009ம் ஆண்டுவரை இருபது ஆண்டு -களுக்கு மேலாக அனுபவித்து இருக்கிறோம். மின்சாரம் இல்லாமல் வீடுகளில் விளக்கு எரிந்தது.பெற்றோல் இல்லாமல் சைக்கிளிலும் கால்நடையாகவும் ஆபத்தான பாதைகளிலும் பயணம் தொடர்ந்தது. போக்குவரத்து தடைப் பட்ட போது கடல்பயணங்களில் ஒல்லித் தேங்காய்களே உயிர்காக்கும் கவசங்கள் ஆயின. சமையல் எரிவாயு இல்லாமல் சமையல் நடந்தது. பால்மா, சீனி இல்லாமல் தேநீர் பருகினோம். பதுங்குகுழிகளில் பிரசவங்களை நடந்தினோம். நீங்கள் ஒரு லீற்றர் பெற்றோல் 20 ரூபாவுக்கு வாங்கிய காலங்களில் நாங்கள் 2000 ரூபாவுக்கு வாங்கினோம். எல்லாவற்றிற்கும் மேலாக அவமானங்களையும், சித்ரவதைகளையும், மரணங்களையும் கடந்தோம்”.

“அந்த வகையில் உங்கள் அரசால் எங்களுக்குக் கிடைத்த புண்ணியம் என்னவென்றால் மிகக் கடுமையான பொருளாதார வறுமையிலும் வாழ்தலுக்கான பாடத்தைக் கற்றுக் கொண்டது எனலாம்” என்கிறார். 2023ம் ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவீனமாக வரவுசெலவுத் திட்டத்தில் முப்பத்தைந்து சதவீதம் ஒதுக்கப்பட்டு உள்ளது.(P-22) இனப் பிரச்சனைக்குத் தீர்வு கண்டிருந்தால் இராணுவ செலவினங்களுக்காக ஒதுக்கப்படும் நிதியில் இதுவரை காலமும் எத்தனையோ பொருளாதார முன்னேற்றங்கள் எட்டப்பட்டிருக்கும். சமாந்தர நகர்வாக தமிழ் பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் அணுகு முறைக்காக அரசமரமும் ஆசைகளை வெறுத்து அகிம்சையை போதித்த புத்தமத சிலைகளும் சின்னங்களும் பயன்படுத்தப் படுகின்றன. மதத்துக்கு மதம் பிடிக்கக் கூடாது எனக்கூறி மனம் வருந்துகிறார். (P-23) இவ்வாறு இன்னும் பலபல.....

இவ்வாறான நூல்களினாலும் அவை வெளிப்படுத்தும் தகவல்களாலும் பயனேதும் உண்டா என்ற கேள்வி இப்போது எமக்குள் எழலாம். அண்மையில் முகநூல் வாயிலாக ஒரு கடிதம் கண்டேன். இந்தப் படைப்பினை வாசித்த பின், 'மவ்பிம' பத்திரிகையின் இதழியலாளரான பெரும்பான்மை இனத்தின் அன்புப் புதல்வி Sandarasee Sudusinghe அவர்களால் அக்கடிதம் எழுதப்பட்டு இருந்தது. ஆரிய சிங்கவின் மகள் என தன்னை உருவகம் கொண்ட அவரது கடிதம், அன்புராசா அடிகளாருக்கு மிகுந்த புரிதல் உணர்வுடனும் மனித நேயத்துடனும் எழுதப்பட்டு இருந்தது. அதே புரிதல் உணர்வு சமூக மயப்படும் போது நன்மாற்றங்கள் நிகழக்கூடும். இந்நூலுக்கான அறிமுக நிகழ்வு யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது கொழும்பிலும் பெரும் பான்மை இனத்தின் பிரதிநிதிகளால் நடாத்தப்பட்டதும் ஆதரவு தரப்பட்டதும் நல்ல சமிக்ஞை தான். அதுமட்டுமல்ல கடல் கடந்தும் கனடா ரொறொன்ரோவில் இந்நூல் அறிமுகவிழா எதிர்வரும் ஜுன் மாதம் 16ம் திகதி நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது. சமூகமாக ஒன்றுசேரும் போது இனம் சார்ந்த கூருணர்வு கொள்ளும் தமிழ் சிங்கள இஸ்லாமிய மக்கள், தனித்தனி மனிதராக வாழும் போது ஒருவருக்கொருவர் பேருதவிகள் புரிந்தும் உயிர்காத்தும் நட்புப் பாராட்டும் பண்பு, அவர்களுள் மறைந்து உறையும் மனிதம் இன்னும் மரித்து விடவில்லை என்பதையே கூறிநிற்கிறது.

இந்த முரண்நிலையை பகுத்தறிவால் வெல்லும் நாளில் வளமானதோர் நாட்டினை உருவாக்கும் ராஜபாட்டை நமக்காக திறந்திருக்கும். அதுவரை உயிர்காக்கும் “ஒல்லித் தேங்காய்களுடன்“ வாழ்க்கைப் பயணத்தைக் கடப்போம். ஆம். அடிகளார் கூறியபடி பாதைகள் மாறினாலும் மாற்றுப் பாதையின் ஊடாகவேனும் பயணங்கள் தொடர வேண்டும். பயணங்கள் மட்டுமல்ல அனைத்து இனங்களினது சமூகப் பார்வைகளும் மாற்றுச் சிந்தனைகளுடன் விரிவு பெற வேண்டும்.

இம்மண்ணை நேசித்தவர்களுக்கும், நேசிப்பவர்களுக்கும் சமர்ப்பணம் செய்யப்பட்ட இந்நூல் அதற்குரிய பலன்களைப் பெற வேண்டும். பெறுமதி மிக்க ஆக்கம் ஒன்றினைத் தந்தமைக்காக அன்புள்ள அருட்தந்தை அன்புராசா அடிகளாருக்கு நன்றிகளும் வணக்கங்களும் உரித்தாகட்டும்.

**நலம் சூழ்க!!**

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.239
## திருப்பாடல் 1-50 வரை

உங்கள் விடைகளை ஆடி மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். உங்கள் விடைகளை பிறிதொரு தாளில் எழுதி அனுப்ப வேண்டும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | ✱ | 06 | | 08 | | | 09 | | |
| ✱ | | ✱ | | | 07 | ✱ | | ✱ | |
| | 02 | | 05 | | | | | 21 | 22 |
| | ✱ | 04 | | | 10 | 11 | | | ✱ |
| 03 | | | 14 | 15 | ✱ | | | | 20 |
| 12 | | 13 | 16 | | 17 | | 19 | | |
| | ✱ | | | | | | | ✱ | 31 |
| | | 34 | | 23 | | 18 | | 24 | |
| 30 | 33 | ✱ | | | | 26 | 32 | | 27 |
| 28 | | | 29 | | | ✱ | | | 25 |

உங்கள் விடைகளை குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(-) என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறை வார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

**இடமிருந்து வலம்**

1. என் ............ உம் நீதியை எடுத்துரைத்து நாள் முழுதும் உம் புகழ் பாடும்.
2. .................கடவுளது முகத்தை தேடுவோர் இவர்களே.
3. தாம் செய்வதனைத்திலும் ....................பெறுவர்.
4. அவரது ...............ஒரு நொடிப்பொழுதுதான் இருக்கும்.
6. மேகங்கள் ............... மழையையும், நெருப்புக் கனலையும் பொழிந்தன.
8. ஆண்டவரே என்னைக் .................
12. ஆண்டவர் தம் .................... கோவிலில் இருக்கின்றார்.
16. கலை ........ நீரோடைகளுக்காக ஏங்கித் தவிப்பது போல.
19. தாம் திருப்பொழிவு செய்தவர்க்கு அவரே பாதுகாப்பான ...................
23. அந்நீரை ................. நிலவறைகளில் சேமித்து வைத்தார்.
26. உண்மையில் மானிடர் அனைவரும் நீர்க் ...................... போன்றவரே.
28. ....................... தொடுத்துப் புகழ் பாடுங்கள்.
29. சினமுற்றாலும் ..................... செய்யாதிருங்கள்.
30. ஆண்டவரே உமது ......... இறைவனின் மலைகள் போல் உயர்ந்தது.

**வலமிருந்து இடம்**

2. ஆண்டவரே உம் கூடாரத்தில் தங்கிட தகுதியுள்ளவர் .............................
10. ........................ உணவுப் படையலை எல்லாம் அவர்.
19. ஆண்டவரின் ........... றவு அவருக்கு அஞ்சி நடப்போர்க்கே உரித்தாகும்.
20. வாய்மையும் ............. யும் எனக்கு அரணாய் இருக்கட்டும்.
21. ....... பொன் அணிந்து வடிவாக வலப்புறம் நிற்கின்றாள் பட்டத்து அரசி.
24. என் நண்பர்களும் தோழர்களும் நான் படும் ......... கண்டு விலகி நிற்கின்றனர்.
25. நானோ, அவர்கள் நோயுற்றிருந்த போது ....... உடுத்திக் கொண்டேன்.
26. பொல்லாரின் உள்ளத்தில் தீமையின் ............ ஒலித்துக் கொண்டே இருக்கிறது.
27. நான் சாவதால் படு ........... க்குப் போவதால் என்ன பயன்?
34. வலிமையும் ஆற்றலும் கொண்ட ஆண்டவர் ...................

**மேலிருந்து கீழ்**

9. ................ களைத் தீக்கு இரையாக்கினர்.
11. ..................... வாழ்நாள் எல்லாம் உம் அருள் நலமும் பேரன்பும் எனைப் புடை சூழ்ந்து வரும்.
12. ஆண்டவருக்கு அஞ்சி வாழ்வோரை அவர்தம் ................ சூழ்ந்து நின்று காத்திடுவர்.
13. நானோ ................... எளியவன்.
14. ஆண்டவர் தம் மக்களுக்கு .................... அருள்வாராக.
15. ஆண்டவரை நாடுவோர்க்கு ................. ஏதும் குறையாது.
17. கடவுளே! யாழிசைத்து ஆர்ப்பரித்து உம்மைப் .............. ந்திடுவேன்.
19. திக்கற்றவர் தம்மை உம்மிடம் ஒப்படைக்கின்றனர் ............ க்கு நீரே துணை.
21. உமது முன்னிலையில் நான் ................... அன்னியன்.
32. எளியோர் நிலத்தை உடைமையாகப் பெறுவர். அவர்கள் வள .............. வாழ்க்கையில் இன்பம் காண்பர்.
33. என்னைக் குறித்து ........................ நூல் சுருளில் எழுதப் பட்டுள்ளது.

**கீழிருந்து மேல்**

2. மன்னரைக் குறித்து .............. கவிதை புனைகின்ற போழ்து,
3. வான் ..................... அவர்தம் கைகளின் வேலைப்பாட்டை விவரிக்கின்றது.
5. அவரது ............ லில் அவரது திருவுளத்தைக் கண்டறிய வேண்டும்.
7. ஆண்டவர் என் அழுகுரலுக்கு .............. சாய்ந்து விட்டார்.
10. .............. வழியை ஆண்டவரிடம் ஒப்படைத்து விடு.
11. வெஞ்சினம் கொள்ளாதே. வெகுண்டெழுவரை விட்டுவிடு ...................... ச்சலடையாதே.
13. கெருபுமீது அவர் ................. ப் பறந்து வந்தார்.
15. எளியோரின் ................ ஒருபோதும் வீண் போகாது.
18. நான் என் .......... வயிற்றிலிருந்தது முதல் என் இறைவன் நீரே.
19. ................யான நீர் நிலைகளுக்கு எனை அழைத்துச் செல்வார்.
22. அவர் நீரோடையோரம் நடப்பட்ட ............ போல் இருப்பார்.
25. ஏனெனில் ............. போது அவர்கள் எதையும் எடுத்துப் போவதில்லை.
30. ............ அளிக்கும் விடுதலையால் என் இதயம் களிகூரும்.
31. என் கண்ணீரைக் ............... டும் மௌனமாய் இராதேயும்.

## அற்புதங்கள் செய்திடும் புனித அந்தோனியார்...



அந்தோனியார் என்றாலே அகிலமே வியந்து பார்க்கும்
அந்தோனியார் அடியார்கள் ஆண்டுதோறும் அதிகரிக்கின்றனர்
அந்தோனியாரின் புதுமைகள் அனைவரையும் கவர்கின்றது.
அந்தோனியாரின் திருவிழாவை ஆண்டுதோறும் கொண்டாடுகின்றனர்.

ஆலயம் செல்லாதோர் அந்தோனியாரிடம் செல்கின்றனர் அவர்
அற்புதங்கள் அனைத்தையும் அகிலத்தில் பரப்புகின்றனர்
ஆதரவற்றோர் அனாதைகள் கைமபெண்கள் கடனாளிகள் என
அவர் ஆறுதல் தேடிச் செல்வோர் ஆயிரமாயிரம் பேர்



கோடி அற்புதர் புனித அந்தோனியார் என்று
கோடிக்கணக்கானோரால் அழைக்கப்பட்டார்
கோபுரம்போல் உயர்ந்து நின்ற தூய அந்தோனியார்
கோழைகளையும் ஏழைகளையும் அதிகம் அன்பு செய்தார்

செவ்வாய் சிறப்பான நாளாக அவருக்கு அர்பணிக்கப்பட்டது
செவிடர் ஊமைகள் ஊனமுற்றோர் பலரை அவர் நலமாக்கினார்
இனமத பேதமின்றி அவர் அனைவராலும் வணங்கப்பட்டார்
இவ்வுலகோரின் இணையில்லா தெய்வமாக அவர் போற்றப்பட்டார்



அற்புதங்கள் புரிந்திடும் புனித அந்தோனியார் - எம் தாய்
அன்னை மரியாளிடம் அதிக அன்பு கொண்டிருந்தார்
அன்பு பாலகன் இயேசுவை கையிலேந்தும் பாக்கியம் பெற்றார்
அவரின் ஆறுதலும் அன்பும் எமக்கு கிடைத்திட அனுதினமும் வேண்டிடுவோம்

**அ. ஜஸ்மின் ஷறோன் - ஆவணம், நானாட்டான்.**

## "கோடி அற்புதரே"

மலர்கள் ஆயிரம் மண்ணிலே தோன்றுது
மட்டில்லா ஆனந்தம் மனதிலே தோன்றுது
மன்னவன் இயேசுவின் பாதத்தில் பூக்குது
அதுதானே தியாகத்தின் ஊற்றுமாய் ஆகுது!

புதுமையின் பூபாளம் புவியிலே கேட்குது
புதுமையின் நாயகன் வாசமோ வீசுது
ஆலய மணியுமோ அசைந்துமே ஆடுது – எம்
அந்தோனியார் புகழுமோ எங்குமே பரவுது!

நாவினால் வார்த்தையை எங்குமே ஓதினார்
நற்செய்தியின் வாழ்வையே வாழ்ந்துமே காட்டினார்
நாடிடும் மாந்தர்க்கு நல்வழிகாட்டினார் – எம்
நற்புனிதன் அந்தோனி புகழுமே வாழ்கவே!

அழியாத நாக்கினை வரமுமாய் பெற்றவா
அழிந்தோரின் வாழ்வை என்றுமே மீட்டவா
அவனியில் ஆசிகள் பலவுமே பெற்றவா – எம்
ஆண்டவன் தொண்டனே! உம் புகழ் வாழ்கவே!

இரந்திடும் அடியவர் குறைகளை கேட்பவா
இல்லார்க்கு எல்லாமும் அள்ளியே கொடுப்பவா
கோடியே நாமமாய் சூடிய பெரும் புனிதா
கோடி காலம் உம் புகழும் என்றுமே வாழ்க! வாழ்க!

**சி.சுஜீவன்**
**மடுறோட் பங்கு.**

**விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 237**
**சரியான விடைகளை அனுப்பியவர்களில்**
பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:



**முதலாம் பரிசு:**
த.வியாகுலமரியை சோபனமுத்து
புங்குடுதீவு.



**இரண்டாம் பரிசு:**தி.
திகழரசன்
அந்தோனியார்புரம்.

**மூன்றாம் பரிசு:**
டே. டிகானா
சிறுக்கண்டல்.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 74 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 69 பேர்.**

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.237ல்**
**சரியான விடைகளை அனுப்பியவர்களில்**
**பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்**

1. பி. றேரு - பெற்றா.
2. ரவிசங்கர் சறோஜினி - ஜோசவ்வாஸ்நகர்.
3. ஆன் ஸ்ரேசி றூபறாஜ் - பள்ளிமுனை.
4. J. மிறோன் றோச் - பள்ளிமுனை.
5. T. றேச்சல் - பள்ளிமுனை.
6. T. ரேறியன் - பள்ளிமுனை.
7. R. எமி - பள்ளிமுனை.
8. R. லிவி - பள்ளிமுனை.
9. க. டர்ஷிக்கா - நானாட்டான்.
10. க. ஜினுவிக்கா - நானாட்டான்.
11. A.P. குணாளன் மெக்ஸ்வெல் - அளவக்கைபங்கு.
12. சந்தியோகு போல்றொபின்சன் - உயிலங்குளம்பங்கு.
13. வின்சன் யோகவதி - உயிலங்குளம் பங்கு.
14. A. ஜெயக்குமார் அபர்ணா - தோட்டவெளி.
15. அன்ரன் ஜெயக்குமார் அபிசான் - தோட்டவெளி.
16. யோ. யூடிற் டலிமா - வங்காலை.
17. கி. ஆன் சாலிக்கா - கட்டைக்காடு.
18. சொ. சைலோ - கட்டைக்காடு.
19. அகுஸ்தின் இசக்கியேல் - ஜோசவ்வாஸ் நகர்.
20. K.R. அற்றியானாபேபி - ஆசிக்குளம்.
22. N. மடோனா - ஆசிக்குளம்.
23. K.R. கலிஸ்ரஸ் - ஆசிக்குளம்.
24. N. பேபி அஸ்விதா - ஆசிக்குளம்.
25. T. இருதயமேரி - கற்குளம்.
26. K. துளசிகா - கற்குளம்.
27. K. கல்பனா - கற்குளம்.
28. J. ஜெவான்ஷிகா - நானாட்டான்.
29. பா. நிதர்சன் - கற்குளம்.
30. தி. ஜென்சன் - அந்தோனியார்புரம்.
31. நீ. நிலவரசி - அந்தோனியார்புரம்.
32. தி. ஜெதுசன் - அந்தோனியார்புரம்.
33. அ. ஜஸ்மின் ஷறோண் - நானாட்டான்.
34. ஜெ. பொலின் - அந்தோனியார்புரம்.
35. வயலட் யோண் - அந்தோனியார்புரம்.
36. றூ. யூட்ஸ்சிக்கா டலிமா - வங்காலை.
37. றூ. ஹறிஸ்மா டலிமா - வங்காலை.
38. ஆ. றூபன் ஜீசஸ் டலிமா - வங்காலை.
39. றூ. மேரி பிறக்சி டயஸ் - வங்காலை.
40. டே. மேரி ஒபிலியா - சிறுக்கண்டல்.
41. டே. நிரூபியா - சிறுக்கண்டல்.
42. அ. எபிரூத் - பெரியமுறிப்பு.
43. அ. அகிரன் குரூஸ் - தேவன்பிட்டி.
44. து. பிறித்திகா - தேவன்பிட்டி.
45. து. துஸ்மிதா - தேவன்பிட்டி.
46. அ. அலைக்சினி - தேவன்பிட்டி.
47. அ. அபிஹாசினி - தேவன்பிட்டி.
48. செ. அஞ்சலா டயஸ் - தாழ்வுபாடு.
49. செ. இன்பென்ரா டயஸ் - தாழ்வுபாடு.
50. செ. அன்ரனிராஜ் - தேவன்பிட்டி.
51. அ. மேரி கலிஸ்ரா - தேவன்பிட்டி.
52. இ. இருதய நந்திகா - தேவன்பிட்டி.
53. அ. டிலக்சன் - நானாட்டான்.
54. இ. இருதய நபின்சா - தேவன்பிட்டி.
55. T. சுஜாந்தினி - மன்னார்.
56. S. டென்சியா பெரேரா - பேசாலை.
57. N. கிறிஸ்ரினா - உயிலங்குளம் பங்கு.
58. M. பிளண்ரீனா - சின்னக்கடை.
59. ம. நெரோஜன் - கீரி.
60. சந்தியோகு ஜஸ்மின் கசில் - மடுக்கரை.
61. ஸ். ஆன் கிருஷியா - உயிலங்குளம் பங்கு.
62. ஸ். கொலஸ்ரீனா - உயிலங்குளம் பங்கு.
63. கி. ஷாணுஜன் - கட்டைக்காடு.
64. ச. மரிய துசாந் - கட்டைக்காடு.
65. S. செபமாலை மார்க் - வங்காலை.
66. A. அபிஷா - புதுக்கமம்.
67. A. பெபிஷா - புதுக்கமம்.

**மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்**
உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் மன்னாவைப்பெற வழிசெய்யுங்கள். ஒருவருடத்திற்கான உள்நாட்டுச் சந்தா ரூபா. 1600/=, வெளிநாட்டுச்சந்தா ரூபா. 6000. எம் மன்னா வாடிக்கையாளர்களே உங்கள் சந்தாக்காலம் முடிவடையும் முன்னதாக உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

# மன்னா

# நினைவு கூருகின்றோம்..!

## திருமண வாழ்வில் 40வது ஆண்டு நிறைவு வாழ்த்து....!!!

11
06
1983



11
06
2023

### திரு,திருமதி. அந்தோனிப்பிள்ளை சகாயநாயகி

ஆவணம், நானாட்டான்

"ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள், ஏனெனில் அவர் நல்லவர். என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு" (தி.பா 106:1)

இறை திருவுளம் ஏற்று இல்லற வாழ்வில் இணைந்து இகமதில்
அன்பாய் வாழும் - எம் அன்புப் பெற்றோருக்காய் நன்றி கூறுகின்றோம்!
இறைவன் அருளிய இனிய பிள்ளைச் செல்வங்களால் இன்புற்றிருக்கும்
இவர்கள் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்! திருக்குடும்பத்தின் வழிநின்று
நல்வாழ்வு வாழ்ந்திடவும் உடல், உள ஆரோக்கியத்துடன் நீரூளி
வாழவும் - எம் அன்னையாம் தூய கார்மேல் அன்னையிடம் வேண்டி
எல்லாமும் நலமாகிட வாழ்த்தி வணங்கி நிற்கின்றோம்!

வாழ்த்துக்கூறி மகிழ்வோர்
அன்புப் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## 41ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
1947
11
22



உதிர்வு
2023
04
29

### திருமதி. அ. மேரி அன்ரோனியா (ராதா)

38A கரப்பன்காடு, வவுனியா.

"அவரது ஆன்மா ஆண்டவருக்கு ஏற்புடையதாய் இருந்தது. தீமை நடுவினின்று ஆண்டவர் அவரை விரைவில் எடுத்துக்கொண்டார்" (சா.ஞா 4:14)

தாய்க்கு தாயாக கணவருக்கு உகந்த மனைவியாக பிள்ளைகளுக்கு
சிறந்த அம்மாவாக மருமக்களுக்கு உரிமையான மாமியாக
பேரப்பிள்ளைகளுக்கு பாசமுள்ள அம்மம்மாவாக சகோதரிக்கு
பண்பான தங்கையாக வாழ்ந்து இறைவழியில் எம்மை வழிநடத்திய
எம் அன்புத்தாயே! நோயை காரணம் காட்டி இறைவன் உம்மை
தன்னிடம் அழைத்தாரே. தாங்க முடியவில்லை உமது இழப்பு
இறைமகனுடன் என்றும் வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
கணவன், மகன், மகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## 41ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
1964
07
27



உதிர்வு
2023
04
23

### அமரர். பாஸ்கர் ஆஞ்சலா பறுனாந்து

8ம் வட்டாரம், பேசாலை

எங்கள் வீட்டின் பொக்கிசமே எங்கள் அம்மா! விருட்சம் போல்
எம்மை தாங்கி நின்றீர்களே அம்மா! எதற்கும் அஞ்சாத் துணிவும்
தைரியமும் கொண்டு குடும்ப உயர்விற்காய் உழைத்து நின்ற
எம் சுமைதாங்கியே! எங்கு சென்றனையோ! ஏது குறை
நாம் செய்தோம். பொல்லா நோய் உம்மை காவு கொண்டதே!
வல்ல பரனின் சந்நிதியில் நீர் அமர்ந்து
இறைபுகழ் பாடிட வேண்டுமென்று
தினமும் நாம் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

பிரிவால் வாடும்: கணவன், அன்புப் பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
1980
07
27



உதிர்வு
2022
06
16

### அமரர். லோறன்ஸ் மொத்தம் மடுத்தீன் (சீலன்)


வஞ்சியன்குளம், வங்காலை

கண்முன் தோன்றிய கனிவான உறவொன்று இன்று காணாமல்
போனதெங்கே? நீ காட்டிய அன்பு வழியில் இன்று நாங்கள்
கால் பதித்து நடக்கின்றோம்... உன் புன்சிரிப்பான பூ முகம் பூமியில்
இனி வருமோ நாங்கள் தவிக்கின்றோம் தவிப்பை யார் துடைப்பார்...
காலம் ஏன் எம்முடன் உன்னை கனதூரம் கொண்டு
செல்லவில்லை, பாதி வழியில் விட்டு சென்றதனால்
பாவிகள் நாம் பரிதவித்து துடிக்கின்றோம்,
சோகம் நிலையில்லை சொர்க்கம் உனக்காக!

பிரிவால் துயருறும்:
அன்புத்தாய், அன்பு மனைவி, பாசமிகு மகன், அண்ணன், அக்காமார்,
அத்தான்மார், அண்ணி, பெறாமக்கள், மருமக்கள்.

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
1948
05
15



இறப்பு
2021
06
01

### அமரர். சூசைதலமை செபமாலை

கறுக்காக்குளம், வட்டக்கண்டல்

வாழ்வுக்கு வழி காட்டியாய், வலம் வந்த தந்தையே
நாளும் பொழுதும் எம்முடனே இருக்கின்றீர்
ஈரவிழிகளுடன் ஈராண்டு ஓடி மறைந்து போனதே
உங்களின் உடல் பிரிந்தாலும் உள்ளம் எம்மோடு
என்றும் இருக்கும்.
தேவனின் பாதத்தில் என்றும்
உமது இளைப்பாறுதலுக்காச் செபிக்கின்றோம்.

பிரிவால் மனதுருகும்:
குடும்பத்தினர்

## நீங்காத நினைவுகளில் ஈராண்டு நினைவஞ்சலி

தாய் மடியில்
1966
03
27



ஆண்டவன் அடியில்
2021
06
27

### அமரர். யோசேப்பு கிறிஸ்ரீனா (றதி)

உயிலங்குளம்

உங்களைப் பிரிந்து ஈராண்டு நகர்ந்து நீங்கள் இல்லாத
இந்த இடைவெளியோ மிகப்பெரியது. எல்லோரையும்
அன்பு செய்து வாழ்ந்தீர்கள் உங்கள் இல்லம் வருகின்ற
எல்லோரையும் ஒரே விதமாக உபசரித்தீர்கள். நீங்கள் வாழ்ந்த
அழகான வாழ்க்கையின் சம்பாவனை நிச்சயம் உங்களுக்கு
கிடைக்கும். உங்கள் அன்பில் இணைந்த நன்றியோடு
அமைதியில் நீங்கள் இளைப்பாற மன்றாடி நிற்கின்றோம்.

பிரிவால் மனதுருகும்:
அன்புத்தாய், தந்தை, பாசமிகு தம்பி யூட் மற்றும் குடும்பத்தினர்,
அன்பிற்கினிய உற்றார், உறவினர்கள்.

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
1945
11
17



உதிர்வு
2021
06
27

### திரு. பேதுரு மனுவேல்

புதுக்கமம், உயிலங்குளம்

"நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன. கடும் தொல்லை எதுவும் அவர்களைத் தீண்டாது" (சா.ஞா 3:1)

ஆண்டுகள் இரண்டு சென்றாலும், அழியாது உங்கள் நினைவுகள்
அன்போடு எம்மைப் பெற்று, பண்போடு எம்மை வளர்த்து
பாசத்தோடு அரவணைத்து பார்போற்ற எம்மை உருவாக்கினீர்கள்
உங்களது ஆன்மா ஆண்டவன் மடியில் அமைதியாய்
இளைப்பாற செபிக்கின்றோம்.

உங்களது பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்

## 13ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
1995
08
21



உதிர்வு
2010
06
11

### செல்வன். நீ. கனிலன்

சிறுக்கண்டல், முருங்கன்

"ஆறாத மனக் காயங்களுடன் 13 வருடங்கள்" "உன் இலட்சியம்
நிறைவேறவில்லை" "உன் கனவுகளோடு பாதி வழிகூட
பயணிக்கவில்லை" ஞானமே மனிதருக்கு உண்மையான நரைதிரை.
குற்றமற்ற வாழ்க்கையே உண்மையான பழுத்த முதமை. (சா.ஞா 4:9)
அந்த நீதிமான் குறுகிய காலத்தில் நிறைவு எய்தினார். அவரது ஆன்மா
கடவுளுக்கு ஏற்புடையதாய் இருந்தது. "உனது இலட்சியம் மண்ணுலகில்
நிறைவேறா விட்டாலும் விண்ணுலகில் நிறைவேற்றப்படுவது
உறுதியாகின்றது. எங்கள் உருக்கமான செப மன்றாட்டை
அன்புத் தந்தை பாரா முகமாயிருப்பாரோ!

பிரிவால் மனதுருகும்:
உனது அம்மா, அப்பா, அண்ணன், அண்ணி, றொமேல்சன்,
ஜெபிக்சன், உறவுகள்.

## 6,7ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்.திரு.வ.சேவியர் கூஞ்ஞ
(தங்கராசா)



அமரர்.சே.லோறன்சியா
(ஆனந்தம்மா)

முத்தரிப்புத்துறை

மலர்வு: 1920.06.11
உதிர்வு: 2017.02.26

மலர்வு: 1930.02.27
உதிர்வு: 2016.06.01

மண்ணக வாழ்வில் இறைவன் இரக்கத்தால்
பல ஆசீர்வாதங்களைப் பெற்றெடுத்த, சந்ததிக்காய் செபித்து
எங்கள் விசுவாசத்திற்கு வித்திட்ட அன்புப் பெற்றோரை
வான்வீட்டில் சேர்த்துக்கொள்ள வேண்டி மன்றாடுகின்றோம்.

இவர்களின் ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

"மன்னா பத்திரிகை"
மன்னா அலுவலகம், கலையருவி,
இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2250789, 076-3801841
- mannamnrc@gmail.com - manna.lk - Mannar Catholic Media, Madhu Matha TV

"மன்னார் கத்தோலிக்க அச்சகம்"
கலையருவி, இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2223674, 077-5338732 / Email: mannarcatholicpress@gmail.com
சகல விதமான பதிப்பக வேலைகளும் நியாயமான விலையிலும்,
தரமான முறையிலும் அச்சிடப்படும்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.